ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




செவ்வாய் ❖ நவம்பர். 21, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 47 ❖ ரூ.10

### தமிழக அரசு தொடர்ந்த வழக்கு; ஆளுநர் 3 ஆண்டுகளாக என்ன செய்தார்?

# கேள்வி

## ஆளுநரின் அடுத்தக்கட்ட நடவடிக்கைக்காக காத்திருப்பதாகக் கூறி வழக்கை டிசம்பர் 1-ஆம் தேதிக்கு உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்தது





**புதுடெல்லி , நவ.21-**

**ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிரான தமிழக அரசு தொடர்ந்த வழக்கில், உச்ச நீதிமன்றம் சரமாரியாக கேள்விகளை எழுப்பியுள்ளது. மேலும், உச்ச நீதிமன்ற நோட்டீஸுக்குப் பின்னரே தன் வசம் தேங்கிக் கிடந்த மசோதாக்களை ஆளுநர் ரவி திருப்பி அனுப்புகிறார் என்றால், கடந்த மூன்று ஆண்டுகளாக அவர் என்ன செய்து கொண்டிருந்தார் என்று காட்டமாகக் கேள்வி எழுப்பியுள்ளது.**

சட்ட மசோதாக்களுக்கு அனுமதியளிப்பதற்கு ஆளுநருக்குகாலநிர்ணயம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி, ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக தமிழக அரசு தொடர்ந்த வழக்கும், மாநில அரசால் அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் ஆரீஃப் கான் காலதாமதப்படுத்துவது தொடர்பாககேரள அரசு தொடர்ந்தவழக்கும் உச்ச நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, தமிழக அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஏ.எம்.சிங்வி, "தமிழக ஆளுநர் அண்மையில் திருப்பி அனுப்பிய 10 மசோதாக்கள் உள்பட 15 மசோதாக்களை கிடப்பில்போட்டுள்ளார். சட்டப்பேரவை நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களை கிடப்பில் போடுவது கவலைக்குரியது என்று உச்சநீதிமன்றம்தெரிவித்த நிலையில், அந்த மசோதாக்களை ஆளுநர் ஆர்.என். ரவி திருப்பி அனுப்பி இருக்கிறார். மசோதாக்களை தேக்கிவைத்து அரசை முடக்க ஆளுநர் முயற்சிக்கிறார்"என்றார். மாநில அரசு சார்பில் ஆஜரான மற்றொரு வழக்கறிஞரான பி.வில்சன், "ஆளுநர் இவ்வாறாக காலவரையின்றி மசோதாக்களை தேக்கிவைத்துக்கொள்ள அனுமதித்தால், மாநிலங்களில் நிர்வாகம் முடங்கிவிடும்" என்று வாதிட்டார்.

தொடர்ந்து, ஆளுநர் ரவி தரப்பில் ஆஜரான அட்டர்னி ஜெனரல் ஆர்.வேங்கடரமணிக்கு நீதிபதிகள் சரமாரியாக கேள்விகளை முன்வைத்தனர். “ஆளுநர் ரவி தரப்பில் நவம்பர் 13-ஆம் தேதி அவர் மசோதாக்களை மாநில அரசுக்கு திருப்பியனுப்பி விட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. நாங்கள் இவ்வழக்கில் எங்கள் கருத்தை முன்வைத்தது நவம்பர் 10-ல். அதன் பின்னர் மூன்றே நாட்களில் ஆளுநர் மசோதாக்களை திருப்பி அனுப்பியுள்ளார். ஆனால், இந்த மசோதாக்கள் 2020-ல் இருந்தே கிடப்பில் உள்ளன. அப்படியென்றால் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியபின்னர்ஆளுநர் முடிவெடுத்திருக்கிறார். மூன்றாண்டுகளாக அவர் என்ன செய்து கொண்டிருந்தார்? கட்சிகள் உச்ச நீதிமன்றத்தை நாடும் வரை ஏன் ஆளுநர்கள் காத்திருக்க வேண்டும்?” என்று வினவினர். அதற்குப் பதிலளித்த அட்டர்னி ஜெனரல்

4ம் பக்கம் பார்க்க

### உலக முதலீட்டாளர்கள் மாநாடை முன்னிட்டு

## புதுக்கோட்டை மாவட்ட அளவிலான கருத்தரங்கத்தினை தமிழக அமைச்சர்கள் துவக்கி வைத்தார்கள்



**புதுக்கோட்டை , நவ.21-**

புதுக்கோட்டை மாவட்டம், ஹோட்டல் சாரதா கிராண்ட் கூட்ட அரங்கில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை,மாவட்ட தொழில் மையம் சார்பில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 முன்னிட்டு, மாவட்ட அளவிலான கருத்தரங்கத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, தலைமையில் நேற்று துவக்கி வைத்து, 2024 உலக முதலீடுகள் மாநாட்டிற்கு தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள முதலீட்டாளர்களிடம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினையும், பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு கடனுதவித் தொகைக்கான காசோலைகளையும் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்,பிரதமமந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், படித்தவேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், பிரதம மந்திரியின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் ரூ.55.69 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளையும் மற்றும் 2024 உலக முதலீடுகள் மாநாட்டிற்கு தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள முதலீட்டாளர்களிடம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினையும், அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் வழங்கினார்கள்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு வரும் ஜனவரி 7 மற்றும்8 ஆகிய நாட்களில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை சென்னையில் நடத்த உள்ளது. அனைவரையும் உள்ளடக்கிய நிலையான மற்றும் நீடித்த வளர்ச்சியினை நோக்கமாகக் கொண்டு 1 டிர்ல்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதில் இம்மாநாடு முக்கிய பங்கு வகிக்கும். இவ்வுலக முதலீட்டாளா;கள் மாநாட்டிற்கு முன்னோடியாககுறு,சிறு மற்றும்நடுத்தரத்தொழில் நிறுவன தொழில்களில், முதலீடுகளை ஈர்க்கும் வகையில் முதலீடுகள் ஈர்க்கும் கருத்தரங்கு இன்றையதினம் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முதலீட்டிற்கான இலக்காக ரூ.500 கோடி நிர்ணயிக்கப்பட்டு இதுவரை ரூ.537.27 கோடிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாற்றிக் கொள்ளப்பட்டன. இதன் மூலம் 1,780 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நிலவும் தொழில் துறைக்கு உகந்த சூழல் அமைப்பு, மேம்பட்ட உள்கட்டமைப்பு,திறமை வாய்ந்த பணியாளர்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு வழங்கப்படும் முக்கியத்துவம், வணிகரீதியான வசதி வாய்ப்புகள் ஆகியவை தொழில் துறையில் முதலீடு செய்தோருக்கு சிறந்த வாய்ப்புகளை வழங்குகிறது.

விண்வெளி, தகவல் தொழில் நுட்பம், செயற்கை நுண்ணறிவு, ஆட்டோ மொபைல், மின்சார வாகனங்கள், ஜவுளி, தரவு பகுப்பாய்வு மற்றும் மேம்பட்ட பொருட்கள் உட்பட பல்வேறு துறைகள் அரசிடமிருந்து சிறப்பு கவனம் மற்றும் ஆதரவைப் பெற்று முதலீடுகளைப்பெற்றிட உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 முக்கிய தளமாகச் செயல்படும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்


3ம் பக்கம் பார்க்க,



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# “தேமுதிக தலைவர் விஜயகாந்தின் உடல்நிலை சீராக உள்ளது” – அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



சென்னை, நவ. 21, "தேமுதிக தலைவர் விஜயகாந்தின் உடல்நிலை சீராக இருக்கிறது. இதுகுறித்துஅவர்சிகிச்சைப் பெற்று வரும் தனியார் மருத்துவமனையை தொடர்பு கொண்டு பேசினேன். அவர் நன்றாக இருக்கிறார். ஐசியுவில் இருக்கிறாரே தவிர, அவரது உடல்நிலை சீராகவே இருக்கிறது" என்று தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணின் கூறியுள்ளார்.

சென்னையில் தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைஅமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது தேமுதிக தலைவர் விஜயகாந்தின் உடல்நிலை குறித்து கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், "கடந்த இரண்டு நாட்களாக அவருக்கு தொடர்ந்து இருமல் பாதிப்பு இருந்தது. இதன் காரணமாக ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். நானும் அந்த மருத்துவ நிர்வாகத்தோடுபேசினேன்.

விஜயகாந்தின் உடல்நலம்சீராகஇருக்கிறது. நேற்று காலையிலும் பேசினேன். அவர் நன்றாக இருக்கிறார். ஐசியுவில் இருக்கிறாரே தவிர, அவரது உடல்நிலை சீராகவே இருக்கிறது. ஏற்கெனவே, அவருக்கு கிட்னி மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதால், அதுதொடர்புடைய மருத்துவரே, தற்போது அவருக்கு ஏற்பட்டுள்ள இருமல் தொடர்பான பிரச்சினைக்கும்மருத்துவம் பார்க்க வேண்டும் என்ற நிலையில், அந்த தனியார் மருத்துவமனையில் அவரை மிகச் சிறப்பாக கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதனிடையே, தேமுதிக தரப்பில் நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "தேமுதிக நிறுவனத்தலைவர் பொதுச்செயலாளர் விஜயகாந்த், வழக்கமான மருத்துவப் பரிசோதனைக்காகசென்று இருக்கிறார். அவர் ஓரிரு நாளில் வீடு திரும்புவார். செயற்கை சுவாசம் கொடுக்கப்படுவதாக தவறான செய்திகளை யாரும் நம்பவேண்டாம். இது முற்றிலும் தவறான செய்திகள். இதுபோன்ற வதந்திகளை யாரும் நம்பவும்வேண்டாம், யாரும் பரப்பவும் வேண்டாம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, தேமுதிக தலைவர் விஜயகாந்த் உடல்நலக் குறைவு காரணமாகசென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் கடந்த நவ.18 ஆம் தேதியன்று அனுமதிக்கப்பட்டார். வழக்கமான மருத்துவப் பரிசோதனைக்காக சென்றுள்ளதாக தேமுதிக தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டிருந்தது நினைவுகூரத்தக்கது.

# “பாஜகதான் உலகின் மிகப்பெரிய, நம்பகமான அரசியல் கட்சி” – ராஜ்நாத் சிங்



ஷாபுரா : நவ. 21, காங்கிரஸ் கட்சி ராஜஸ்தானின் பெருமை, கண்ணியத்தில் வடுக்களையே ஏற்படுத்தியுள்ளது என்றும் பாஜகதான் உலகின் மிகப்பெரிய, நம்பகமான அரசியல் கட்சி என்றும் பாதுகாப்புதுறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம், ஷாபுராவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ராஜ்நாத் சிங் பேசுகையில், "கடந்த 5 ஆண்டுகளில் காங்கிரஸ் அரசு ராஜஸ்தானின் பெருமை மற்றும் கண்ணியத்தில்வடுக்களை ஏற்படுத்தக்கூடிய பணிகளை மட்டுமே செய்துள்ளது. எங்கள் கட்சியில் உள்ள ஒரு நபர் தவறாக நடக்கலாம், ஆனால் எங்களுடைய கட்சி தவறான பாதையில் செல்லாது. பாஜகதான் உலகின் மிகப்பெரிய மற்றும் நம்பகமான அரசியல் கட்சி. நாங்கள் அறிவித்த அனைத்து வாக்குறுதிகளையும், நிறைவேற்றியுள்ளோம்.

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் பிரிவு 370-ஐ ரத்து செய்வதாக நாங்கள் உறுதியளித்தோம், அதை நாங்கள் செய்தோம். அயோத்தியில் ராமர் கோவில் கட்டப்படும் என்று நாங்கள் உறுதியளித்தோம். அதன் வேலை தற்போது நடைபெற்று வருகிறது. ஜனவரி 22 அன்று ராமரை தரிசனம் செய்ய உங்களுக்கு அழைப்பும் விடுக்கப்பட்டிருக்கிறது. ராஜஸ்தானில் கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை பாஜக நிறைவேற்றும் என நான் வாக்குறுதி அளிக்கிறேன். முன்னதாக, இந்தியா ஏதாவது சொன்னால், உலக நாடுகள் நம்மை பலவீனமான தேசமாகக் கருதினார்கள். ஆனால் இப்போது அப்படிக் கிடையாது” என்றார்.

ராஜஸ்தான் மாநில சட்டப்பேரவைத் தேர்தல் வரும் 25 ஆம் தேதி நடைபெற உள்ளது. மொத்தம்200தொகுதிகளை ராஜஸ்தான் மாநிலத்துக்கு ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. நவம்பர் 25 ஆம் தேதி பதிவாகும் வாக்குகள் டிசம்பர் 3 ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.






புதுக்கோட்டை அருகில் உள்ள குமரமலையில் அருள் பாலித்து வரும் ஸ்ரீ பாலதண்டாயுதபாணி திருக்கோவிலில் கார்த்திகை முதலாம் சோமவாரத்தை முன்னிட்டு ஸ்ரீ பாலதண்டாயுதபாணி சுவாமிக்கு 1008 சங்காபிஷேகங்கள், மஹா அபிஷேகங்கள் திருநீர் அலங்காரத்தில் தீபாராதனை நடைபெற்றது, மாலையில் ஸ்ரீ பால தண்டாயுதபாணி சந்தன காப்பு மலர் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார் திரளான பக்தர்கள் வருகை தந்து சுவாமியை வழிபட்டனர், சோமவார சிறப்பு வழிபாடு நிகழ்ச்சியை நிர்வாகிகள் சிறப்புடன் கவனித்தனர்.

# அரசியல் அங்கீகாரம் பெற தேர்தல்களில் பிராமணர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் : நடிகர் எஸ்.வி.சேகர் வலியுறுத்தல்



சென்னை : நவ. 21, அரசியல் அங்கீகாரம் இல்லாத எந்த சாதிக்கும் மரியாதை இருக்காது. எனவே,வரும்தேர்தல்களில் பிராமணர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்று நடிகர் எஸ். வி.சேகர் வலியுறுத்தினார். ‘தமிழகத்தில்பிராமணர்கள் எதிர்காலம்’ என்ற தலைப்பிலானகருத்தரங்கம் சென்னை மயிலாப்பூரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக நடிகரும், பாஜக ஆதாரவளருமான எஸ். வி.சேகர் பங்கேற்றுப் பேசியதாவது: தாய், தந்தை, சாதி, மதம் போன்றவற்றை நம்மால் தீர்மானிக்க முடியாது. இறைவன்தான் தீர்மானிப்பார். ஒருவர் தேவையின்றி மதம் மாற வேண்டியதில்லை. ஒவ்வொரும் தங்களது சமூகத்தின் பெருமைபற்றி பேசலாம். கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், அடுத்த சமூகத்தினரை இழிவுபடுத்திபேசக்கூடாது. தமிழகத்தில் பிராமணர்கள் 45 லட்சம் பேர் உள்ளனர். பிராமணர்களை உயர் சாதியினர் என்று கூறியே, அனைத்து சலுகைகளும் மறுக்கப்பட்டு வருகின்றன. எனவே, தமிழகத்தில் பிராமணர்களுக்கு நல வாரியம் அமைக்கவும், பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவை ஏற்படுத்தித்தரவும்முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கடிதம் எழுதியிருக்கிறேன். பிராமணர்கள் சமூகம் முன்னேற,நாம்ஒன்றுபட்டு செயல்பட வேண்டும்.

அரசியல் அங்கீகாரம் இல்லாத எந்த சாதிக்கும் மரியாதை இருக்காது. எனவே,வரும்தேர்தல்களில் பிராமணர்களுக்குவாய்ப்பு வழங்கி, அங்கீகாரத்தை ஏற்படுத்தித் தர வேண்டும். பிரதமர் மோடியை, அண்ணாமலை ஏமாற்றி வருகிறார். அவரது செயல்பாடுகள் மதரீதியாகவும், தீயநோக்குடனும் உள்ளன. இதனாலே அவரை எதிர்க்கிறேன். அண்ணாமலையின் பேச்சை நம்பாதீர்கள். வரும் மக்களவைத் தேர்தலில் பாஜக மாபெரும் வெற்றியடையும். ஆனால், தமிழகத்தில் மட்டும் எந்த மாற்றமும்இருக்காது. புதிதாகத் தொடங்கியுள்ள அறவோர் முன்னேற்றக் கழகம், பிராமணர்களின் நலனுக்காகத் தொடங்கப்பட்டுள்ளது என்று நடிகர் எஸ்.வி.சேகர் கூறினார்.

# அதிகாலையில் காவலர் குடியிருப்பில் திடீரென எரிந்த 10 பைக்குகள் : காவலர்கள் அதிர்ச்சி



சென்னை, நவ. 21–

காவலர் குடியிருப்பில் அதிகாலையில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 10க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் தீயில் இருந்து நாசமானது. காவலர் குடியிருப்பில் சிசிடிவி கேமராக்கள் இல்லாததால் தீ விபத்துக்கான காரணத்தை கண்டுபிடிக்க முடியாமல் போலீஸார் திணறி வருகின்றனர்.

சென்னை எழும்பூர் லேங்ஸ் கார்டன் சாலை பகுதியில்உள்ளநரியங்காடு காவலர் குடியிருப்பில் சுமார் 200க்கும் மேற்பட்ட காவலர்கள் குடும்பத்துடன் வசித்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று அதிகாலை குடியிருப்பு பகுதியில் இருசக்கர வாகனங்கள் நிறுத்தி வைத்திருந்த இடத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

இதில்10க்கும்மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் தீயில் எரிந்து நாசமாயின. காலை பணிக்கு செல்வதற்காக காவலர் ஒருவர் எழுந்து வந்து பார்த்தபோது இருசக்கர வாகனங்களில் இருந்து புகை வருவதை கண்டு உடனடியாக தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

அதன்பேரில் சம்பவ இடத்திற்கு வந்த எழும்பூர் தீயணைப்பு வீரர்கள் ஒரு மணிநேரம் போராடி முழுவதுமாக தீயை அணைத்தனர். அதற்குள் 10க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் முற்றிலும் எரிந்து சாம்பலானது. இது குறித்து எழும்பூர் போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். முதற்கட்டவிசாரணையில் டிரான்ஸ்பார்மரில்இருந்து விழுந்த தீப்பொறிப்பட்டு இருசக்கர வாகனங்கள் தீ பிடித்து எரிந்தது தெரியவந்துள்ளது. இருப்பினும் மர்மநபர்கள் யாரேனும் காவலர் குடியிருப்பில் புகுந்து இருசக்கர வாகனங்களுக்கு தீவைத்தார்களா? என்பது குறித்தும் போலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் காவலர் குடியிருப்பில் சிசிடிவி கேமரா இல்லாததால் தீ விபத்துக்கான காரணம் தெரியாமல் போலீஸார் திணறி வருகின்றனர். பொதுமக்களை சிசிடிவி கேமரா பொருத்துமாறு வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வரும் காவல்துறையினர் காவலர் குடியிருப்பில் சிசிடிவி கேமரா பொருந்தாமல் இருப்பது பெரும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.



காரைக்கால் மாவட்டம் வரிச்சிக்குடி ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் எழுந்தருளிள்ள ஸ்ரீ வள்ளி ஸ்ரீ தெய்வ சேனா ஸ்ரீ சுப்பிரமணியசாமிக்கு மாலை 6.00. மணிக்கு மேல் திருக்கல்யாணவைபோவம் மிக சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகிகள் மகளிர் வார வழிபட்டுமன்றத்தினர் இளைய நிலா இளைஞர் நற்பணி மன்றத்தினர் வரிச்சிக்குடி வர்த்தக சங்கத்தினர்– செய்து இருந்தனர்




மருதுபாண்டியர்கள் குருபூஜை மற்றும் தேவர் ஜெயந்தி விழாவை முன்னிட்டு நல்ல முறையில் பாதுகாப்பு வழங்கிய தென் மண்டல ஐஜி–யை அகில இந்திய பார்வர்டு பிளாக் பொதுச்செயலாளர் பி.வி.கதிரவன் மற்றும் நேதாஜி சுபாஷ் சேனை நிறுவனத் தலைவர் வி.மகாராஜன் ஆணைக்கிணங்க மாநிலச் செயலாளர் ம.சுமன்தேவர் மற்றும் மருது தேசிய கழகத்தின் தலைவர் பா.மருதுபாண்டியன் ஆகியோர் நேரில் சந்தித்து நன்றியினை தெரிவித்தனர்.



புதுவை அரசு காரைக்கால் மாவட்ட நிர்வாகம் மற்றும் சமூக நலத்துறை இணைந்து மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி பிறந்த தினத்தை முன்னிட்டு தேசிய ஒருமைப்பாட்டு வார விழாவாக கொண்டாடப்படுவதின் ஒரு பகுதியாக இரண்டாம் நாளான நேற்று சிறுபான்மையோர் தினவிழா எம்.ஓ.எச்.பாரூக் மரைக்கையார் நினைவு சமுதாயக் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வினை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அ.குலோத்துங்கன் தலைமையேற்று துவக்கி வைத்தார்கள். நிகழ்ச்சியின் முதலில் விழா மேடையில் வைக்கப்பட்டிருந்த அன்னை இந்திராகாந்தி அவர்களின் உருவப்படத்திற்கு ஆட்சியர் சமூக நலத்துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் உள்ளிட்ட அனைவரும் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். . மேலும் இந்நிகழ்வில் சிறுபான்மையினர் நலன் காத்திடல் என்றும் அவசியமே என்ற தலைப்பில் ஓய்வு பெற்ற பள்ளி முதல்வர் நடராஜன் மற்றும் அப்துல் லத்தீப் மேலும் கலைமாமணி .சூசைராஜ் ஆகியோர் பேசினார்கள். இந்நிகழ்வில் சுமார் 200-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.

# 100 நாள் வேலை திட்டத்தில் 10 வாரம் ஊதியம் வழங்கவில்லை: கடும் நெருக்கடியால் தொழிலாளர்கள் தவிப்பு



கோவில்பட்டி, நவ. 21–

இந்தியா முழுவதும் கடந்த 2005-ம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டம் கொண்டு வரப்பட்டது. விவசாய பணிகள் இல்லாத காலங்களில் கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவேஇத்திட்டம் கொண்டு வரப்பட்டது.

தினசரி ஊதியமாக ரூ.294 வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், கடந்த சில மாதங்களாக ஊரகவேலைஉறுதித்திட்ட தொழிலாளர்களுக்கு முறையாக ஊதியம் வழங்கப்படவில்லை. தற்போது சுமார் 10 வாரங்கள் வரை ஊதியம் வழங்கப்படவில்லை. இதனால் அத்தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க மாநில குழு உறுப்பினர் கு.ரவீந்திரன் கூறியதாவது: பருவமழை மாறுபாடு காரணமாக விவசாய பரப்பும், விவசாயிகளின் எண்ணிக்கையும் ஆண்டுக்குஆண்டுகுறைந்து வருகிறது. இதனால் கிராமப்புறங்களில் 100 நாள் வேலையின் தேவை அதிகரித்துள்ளது. இத்திட்டத்தில் பெண்கள் தான் 98 சதவீதம் பணியாற்றுகின்றனர். முதியோர், மாற்றுத்திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 92.86 லட்சம் பேருக்கு வேலை உறுதித் திட்ட அட்டை வழங்கப்பட்டுள்ளது.சுமார் 76.15 லட்சம் குடும்பங்கள் பயன்பெறுகின்றன. இந்நிலையில், இத்திட்டத்தில் நாடு முழுவதும் வழங்க வேண்டிய ரூ.17 ஆயிரம் கோடி ஊதியம் நிலுவையில் உள்ளது. மத்திய பட்ஜெட்டில் ஊரக வேலை வாய்ப்பு திட்டத்துக்கான நிதி குறைக்கப்பட்டதே இதற்கு காரணம்.

கடந்த2021-22-ம்ஆண்டு மத்திய பட்ஜெட்டில் இத்திட்டத்துக்கு ரூ.89 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 22-23-ம் ஆண்டுபட்ஜெட்டில்ரூ.73 ஆயிரம் கோடியாகவும், 23-24-ம் ஆண்டு பட்ஜெட்டில் ரூ.60 ஆயிரம் கோடியாகவும் குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்கு இந்த நிதியாண்டுக்கு ரூ.4,118 கோடி மட்டுமே ஊதியம் விடுவிக்கப் பட்டுள்ளது. இன்னும் ரூ.3,000 கோடி பாக்கிகொடுக்கப்படாமல் உள்ளது.

இதனால் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் 8 வாரம் முதல் 13 வாரம் வரை சம்பளம் வழங்காமல் இருந்தனர். தீபாவளிநெருங்கியபோது, ஊதியம் வழங்காததை கண்டித்து விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில்போராட்டங்கள் நடத்தப்பட்டன. அதன்பின் 2 முதல் 3 வாரங்களுக்கான ஊதியம் வழங்கினர். சுமார் 10 வாரங்களுக்கான சம்பளப் பணம் வழங்கப்படாமல் உள்ளது. இதனால் இத்திட்ட தொழிலாளர்கள் பலரும் வேலைக்காக நகரத்துக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் இந்தியா முழுவதும் 21 மாநிலங்களில் 11 கோடி பேர்வேலையிழக்கக்கூடிய சூழல் உருவாகி உள்ளது. மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், துணை பட்ஜெட் தாக்கல் செய்து நிதி ஒதுக்கிவிடுகிறோம் எனக் கூறினார். ஆனால், இதுவரை துணை பட்ஜெட்டும் தாக்கல் செய்யவில்லை, நிதியும் ஒதுக்கவில்லை. மத்திய அரசு உடனடியாக ஊரக வேலை வாய்ப்பு திட்டத்துக்கான நிதியை ஒதுக்கி, கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

# தமிழ்நாடு அளவிலான எஸ்.ஆர்.அரங்கநாதன் நூலகர் விருது வழங்கும் விழா

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விருது வழங்கினார்



மயிலாடுதுறை, நவ.21–

தமிழ்நாடு அளவிலான எஸ்.ஆர்.அரங்கநாதன் நூலகர் விருது வழங்கும் விழா . பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்று விருது வழங்கினார்.

மயிலாடுதுறைக்கு புதிய நூலக கட்டிடம் கட்டி தர வாசகர்கள் கோரிக்கை மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் இந்திய நூலகத் தந்தை எஸ்.ஆர் அரங்கநாதனின் நினைவை போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்தில் நூலகர்களுக்கான சிறந்த விருது வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட தமிழக கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நூல்களையும் வாசகர்களையும் இணைக்கும் பணியினை சிறப்பாக செயல்பட்ட 34 நூலகர்களுக்கு எஸ். ஆர். அரங்கநாதன் விருதினை வழங்கி சிறப்பு சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கம் மற்றும். ரூபாய் 5 ஆயிரம் காசோலையும் வழங்கி கௌரவித்தனர்.

மேலும் தமிழக அளவில் அதிக உறுப்பினர்கள் புரவலர்கள் சேர்த்தல் மற்றும் அதிக தளவாடங்கள், காலி மனைகள், கட்டடங்கள் பெற்ற மாவட்ட மைய நூலகம், முழுநேர கிளை நூலகம், கிளை நூலகம் மற்றும்ஊர்ப்புறநூலகங்கள், தலா 4 கேடயங்கள் வீதம் 12 கேடயங்கள் வழங்கப்பட்டது.

மேலும் பொதுமக்களிடையே குறிப்பாக மாணவர்கள், குழந்தைகள், படித்த இளைஞர்கள், பெண்கள் ஆகியோர்களிடையே அதிகம் வாசிக்கும் பழக்கத்தைமேம்படுத்துதல், நூலக முன்னேற்றத்தில் ஆர்வமுள்ளவர்கள், ஆசிரியர்கள், நூலக ஆர்வலர்கள் எழுத்தாளர்கள் சேவை மனப்பான்மை புலவர்கள் ஆகியோர்களை கொண்டு இவ்வாண்டில் மாநில அளவில் சிறப்பாக பங்காற்றிய 13 வாசகர் வட்ட தலைவர்களுக்கு நூலக ஆர்வலர் விருது வழங்கப்பட்டது.

முன்னதாகசீர்காழியில் பிறந்து இந்திய நூலக தந்தையின் நினைவாக ரூ. 1 கோடியே 32 லட்சம் செலவில் கட்டப்பட்டு வரும் புதிய கட்டிடத்தை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பார்வையிட்டார்.

இவ்விழாவில் சுற்றுசூழல் துறை அமைச்சர் மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி, பொது நூலக இயக்குனர் இளம்பகவத், பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம், சீர்காழி, பூம்புகார், மயிலாடுதுதறை எம்.எல்.ஏக்கள் பன்னீர்செல்வம், நிவேதா முருகன், ராஜகுமார் மற்றும் சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் அர்ச்சனா, சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி, உதவி செயற்பொறியாளர் ராமர், வட்டாட்சியர் இளங்கோவன் ஆகியோர் உடன் இருந்தனர்.



▶ முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வேலூர் மாவட்டம், கி. வ குப்பம் வட்டம். லத்தேரி கிராமத்தில் நடைபெற்ற சிறப்பு பட்டா முகாமை துவக்கி வைத்து நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சிறப்புப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் துமு கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார், அமுலு விஜயன் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் மு.பாபு, துணை மேயர் மா.அனில் குமார். மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, ஒன்றியக்குழுத் தலைவர் ரவிசந்திரன். குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் வெங்கட்ராமன் உட்பட பலர் கலந்து கொண்டார்.



▶ தென்காசி களக்கோடி தெரு, மங்கம்மா சாலையில் அமைந்துள்ள, ஷீரடி வைத்திய சாய்பாபா திருக்கோயிலில் கார்த்திகை சோமவாரத்தை முன்னிட்டு ஷீரடி வைத்திய சாய் பாபாவிற்கும், ஸ்ரீ வில்வேஸ் வரருக்கும் 108 சங்காபிஷேகம் நடைபெற்றது, இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சங்காபிஷேகம் செய்தனர்.

# சென்னை குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறையின் அறிக்கை

சென்னை, நவ.21–

சென்னை குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறையின் செயல்பாடுகள் குறித்து அறிக்கை வெளியிட்டு உள்ளது அதன் விபரம் வருமாறு, மாநில எல்லை சோதனை சாவடிகள் மற்றும் மாவட்ட எல்லை சோதனை சாவடிகளில் களகண்காணிப்பு மூலம் பொது விநியோகத் திட்ட பொருட்கள் கடத்தலை, குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு துறை கண்காணிக்கிறது.

அண்டை மாநிலங்களுக்கு செல்லும் சில வழித்தடங்களில் தகவல் அடிப்படையில் ஆன திடீர் சோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன. மேலும் பொது விநியோகத் திட்ட பொருட்கள் கடத்தல் காரர்களின் செயல்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப் படுகின்றன. பயன்படுத்தப்படாத கிடங்குகள், அரவை ஆலைகள் மற்றும் நியாயவிலை கடைகள் கண்காணிக்கப் படுகின்றன.

13 .10.2023 முதல் 12.11.2023 வரையிலான காலகட்டத்தில் குடிமைப் பொருள் வழங்கள் குற்ற புலனாய்வுத்துறை அலகுகள் மூலம் 832 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அதன் மூலம் 2693 குவின்டால் விநியோகத் திட்ட அரிசி, 660 லிட்டர் பொது விநியோகத் திட்ட மண் எண்ணெய் மற்றும் 196 வீட்டு உபயோக சமையல் எரிவாயு உருளைகள் (வணிக ரீதியாக பயன்படுத்தியமை) ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும் கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு ரூபாய் 17,13,845 ஆகும். மற்றும் கடத்தல்/ பதுக்களில் ஈடுபட்ட 860 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 143 பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் கடத்தல் வழக்கில் கைப்பற்றப்பட்ட 254 வாகனங்கள் மின் ஏலம் மற்றும் பொது ஏலம் மூலம் வாகன விடுப்பு செயல்முறை பின்பற்றப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளன.

மேலும் கள்ளச் சந்தை மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வளங்கள் பராமரிப்பு சட்டத்தின் கீழ் 07 முக்கிய குற்றவாளிகள் தடுப்பு காவலில் கைது செய்யப்பட்டுள்ளனர், மேலும் 103 நபர்கள் கண்காணிக்கப்பட்டு அவர்கள் மீது குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 110 கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்து உள்ளனர்.

### சென்னை புது வண்ணாரப்பேட்டையில் 68 லட்சம் மதிப்பீட்டில்

# நவீன மீன் அங்காடி, ஆர் கே நகர் சட்டமன்ற உறுப்பினர் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அடிக்கல் நாட்டினர்

சென்னை,நவ,21

சென்னை புதுவண்ணாரப்பேட்டை வ. உ சிநகர் பகுதியில் உள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்பு பகுதியில் மீன்கள் விற்பனை செய்வதற்கு 96 கடைகள் கட்டப்பட்டு 18 ஆண்டுகளாக மீன் அங்காடி செயல்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளாக மீன் அங்காடி சேதம் அடைந்து காணப்பட்டு மழை மற்றும் வெயில் காலத்தில் மீன்களை விற்பனை செய்ய மீனவர்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகி வந்தனர்.

மீன் அங்காடியை புதுப்பித்து தர கோரி மீனவர்கள் ஆர்கே நகர் சட்டமன்ற தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட்ட ஜேஜே எபினேசரிடம் கோரிக்கை வைத்தனர். ஆர் கே நகர் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர் ஜேஜே எபினேசர் தனது சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து முதற்கட்டமாக 68 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு புதிதாக மீன் விற்பனை அங்காடி கூடம் கட்ட முடிவு செய்யப்பட்டது.



அதற்கான பூமி பூஜை போடுவதற்காக நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே எபினேசர் தலைமையில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி,சென்னை மாநகராட்சி நகரமைப்பு குழு தலைவர் இளைய அருணா ஆகியோர் கலந்துகொண்டு பூமி பூஜையில் தொடங்கி வைத்தனர்.

இங்கு 106 மீன் கடைகள் கட்டப்பட உள்ளது இதன் மூலம் மீன் காய்கறிகள் பூக்கள் ஆகியவை விற்பனை செய்ய உள்ளதாக தெரிவித்தனர். இந்த மீன் மார்க்கெட் இருக்கு புதுவண்ணாரப் பேட்டை சுற்றியுள்ள பொதுமக்கள் பயன்படுத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில் திமுக ஆர்கேநகர்பகுதிசெயலாளர்கள் லட்சுமணன் ஜெப தாஸ் பாண்டியன், சென்னை மாநகராட்சி நான்காவது மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன்,மாமன்ற உறுப்பினர்கள் குமாரி நாகராஜ். ரேணுகா. மற்றும் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பொண் இளவரசன். மருதுகணேஷ் வட்ட செயலாளர்கள் திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### காட்டுமன்னார்கோயிலில்

# தேர்தல் விழிப்புணர்வு கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சார் ஆட்சியர் பரிசு வழங்கினார்

காட்டுமன்னார் கோயில் நவ.21

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் வருவாய் துறை மற்றும் புரட்சித்தலைவர் டாக்டர் எம்ஜிஆர் அரசு கலை கல்லூரி சார்பாக தேர்தல் வழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது.



நிகழ்ச்சியில் காட்டுமன்னார்கோயில் வட்டாச்சியர் தமிழ்ச்செல்வன் தலைமை தாங்கினார். கலைக் கல்லூரி முதல்வர் மீனா, இயக்குநர் உடற்கல்வி துறை மற்றும் கல்லூரியின் தேர்தல் விழிப்புணர்வு கண்காணிப்பாளர் சரவணன், தேர்தல் துணை வட்டாச்சியர் வேலுமணி, காமராஜ் வருவாய் ஆய்வாளர்கள் தென்னரசு சீனு ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிதம்பரம் சார் ஆட்சியர் சுவேதா சுமன் கொடியசைத்து பேரணியை துவக்கி வைத்தார். 200 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் 18 வயது பூர்த்தி அடைந்த அனைவரும் கட்டாயம் புதிய வாக்காளர் சேர்ப்பு முகாமில் கலந்து கொண்டு அனைவரும் புதிய வாக்காளர் அடையாள அட்டை பெற பதிவு செய்ய வேண்டும் என்று கோஷம் எழுப்பினர், நகரின் முக்கிய வீதிகளின் வழியாக தேர்தல் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இறுதியாக தேர்தல் விழிப்புணர்வு கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சார் ஆட்சியர் பரிசுகள் வழங்கினார். நிகழ்ச்சியில் கிராம நிர்வாக அலுவலர்கள் கிராம உதவியாளர்கள் கலந்து கொண்டனர்

# விழிப்புணர்வு எச்சரிக்கையால் ரூ.600 கோடி மோசடி தடுப்பு

புதுடெல்லி : நவ. 21–

இணைய மோசடிகளை தடுக்க 2021 ஏப்ரலில் குடிமக்கள் நிதி சைபர் மோசடி அறிக்கை மற்றும் மேலாண்மை அமைப்பு (சிஎஃப்சிஎஃப் ஆர்எம்எஸ்) ஏற்படுத்தப்பட்டது. இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டதில் இருந்து கொடுக்கப்படும் எச்சரிக்கை அறிவிப்புகளால் இணைய மோசடிகள் தடுக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து சிஎஃப்சிஎஃப் ஆர்எம்எஸ் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: சிஎஃப்சிஎஃப் ஆர்எம்எஸ் அமைப்பு தக்க நேரத்தில் வழங்கும் மிகவும் பயனுள்ள எச்சரிக்கை அறிக்கையால் ரூ.600 கோடிக்கும் அதிகமான ஆன்லைன் மோசடி உரிய நேரத்தில் தடுக்கப்பட்டு மோசடி நபர்களின் கைகளுக்கு அந்த தொகை சென்றடைவது தடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பில் மோசடி பரிவர்த்தனை தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க ஏதுவாக, அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், சட்ட அமலாக்கமுகவர், வங்கிகள், வெர்சுவல்வாலட், இ–காமர்ஸ் உள்ளிட்ட 243 நிதி நிறுவனங்கள் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.



மோசடி குறித்து பாதிக்கப்பட்டவர்கள் சட்ட அமலாக்க நிறுவனத்துக்கு புகாரளித்தவுடன் மோசடி பரிவர்த்தனை பயனாளியின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு சிஎஃப்சிஎஃப் ஆர்எம்எஸ்–ல் சமர்ப்பிக்கப்பட்டவுடன் பரிவர்த்தனையை முடக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்த அமைப்பு உதவுகிறது. மோசடி செய்யப்பட்ட பணம் இன்னும் கணக்கில் இருக்கிறதா என்பதை சரிபார்த்து அது நிறுத்தி வைக்கப்படுகிறது.

### மணல் குவாரிகளில் அமலாக்கத்துறை சோதனை

# தமிழக நீர்வளத்துறை முதன்மைப் பொறியாளர் விசாரணைக்கு ஆஜர்

சென்னை : நவ. 21–

தமிழகத்தில் உள்ள மணல் குவாரிகளில் நடத்தப்பட்ட சோதனையின் அடிப்படையில் அனுப்பிய சம்மன் தொடர்பாக தமிழக நீர்வளத்துறை முதன்மை பொறியாளர் முத்தையா சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜரானார்.

தமிழக அரசின் நீர்வளத் துறை சார்பில் ஆன்லைன் முன்பதிவு மூலம் ஆற்று மணல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதில், மணல் வாங்குபவர்களுக்கு அரசு சார்பில் இ–ரசீது வழங்கப்படுகிறது. இந்தநிலையில், இதில் முறைகேடு நடப்பதாகவும், உரிய நடைமுறையை பின்பற்றாமல் சட்டவிரோதமாக மணல் விற்கப்படுவதாகவும், இதனால் கோடிக்கணக்கில் வரி ஏய்ப்பு நடப்பதாகவும் அமலாக்கத் துறை அதிகாரிகளுக்கு தொடர்ந்து புகார்கள் சென்றன.

இந்நிலையில், அமலாக்கத் துறை அதிகாரிகள் பல்வேறு குழுக்களாக பிரிந்து, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஒரே நேரத்தில் தீவிர சோதனை நடத்தினர். திருவள்ளூர், வேலூர், விழுப்புரம், நாமக்கல், கரூர், திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள குவாரிகளில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.



அனைத்து இடங்களிலும், துப்பாக்கி ஏந்திய மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் பாதுகாப்புடன் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடந்த இந்த சோதனையில், சட்ட விரோத பணப் பரிமாற்றம் தொடர்பாக பல்வேறு முக்கிய ஆவணங்கள், கணக்கில் வராத பணம் சிக்கியதாக கூறப்பட்டது. இந்த சோதனைகளின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், ஒப்பந்ததாரர்கள் ஆகியோருக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியிருந்தது.

இந்நிலையில், சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில், தமிழக நீர்வளத்துறையின் முதன்மை பொறியாளர் முத்தையா நேற்று விசாரணைக்கு ஆஜரானார். தமிழகத்தில் செயல்பட்டு வரும் மணல் குவாரிகளுக்கு ஒப்பந்தங்கள் எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது?, அவை எவ்வாறு கண்காணிக்கப்படுகிறது? தமிழகத்தில் எத்தனை குவாரிகளுக்கு மணல் அள்ளுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது? உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை இந்த விசாரணையின்போது அமலாக்கத்துறை அதிகாரிகள் கேட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

# தலைமை ஆசிரியர்களுக்கு பறந்த உத்தரவு : தமிழ்நாடு அரசு அதிரடி

சென்னை : நவ. 21,

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சத்துணவின் தரம் குறித்த அறிக்கையை, தலைமை ஆசிரியர்கள் தினமும் சமர்ப்பிக்க வேண்டுமென தமிழ்நாடு அரசு சார்பில் உத்தரவிடப்பட்டுள்ளது.



இது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநரகம் சார்பில் அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கு சுற்றறிக்கை ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அதில், "தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனுக்காக சத்துணவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறு மாணவர்களுக்கு வழங்கப்படும்சத்துணவின் தரம் மற்றும் அளவை உறுதி செய்ய ஏதுவாக தானியங்கிகண்காணிப்பு என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. பள்ளி தலைமை ஆசிரியர்கள் மூலம் சத்துணவு குறித்த தகவல்கள் குறுஞ்செய்தியாக மாவட்ட சமூகநலத்துறை அலுவலர்களுக்கு தினம் தோறும் அனுப்பப்பட்டு வருகிறது. இந்நிலையில் சமூக நலத்துறை ஆணையர்கடிதம்ஒன்றை அனுப்பி உள்ளார். அதில் அண்மையில் மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட அறிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டன. அப்போது பல்வேறு பள்ளிகளில் ஏஎம்எஸ் அமைப்பு மூலம் தினசரி சத்துணவு அறிக்கையை தலைமை ஆசிரியர்கள் முறையாக மாவட்ட சமூக நலத்துறைக்கு அனுப்பாமல் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

எனவே இதில் அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஏஎம்எஸ் அமைப்பு மூலம் சத்துணவு அறிக்கையை குறுஞ்செய்தியாக தினமும் காலை 11 மணிக்குள் மாவட்ட சமூக நலத்துறை அலுவலருக்கு அனுப்பி வைக்க வேண்டும். இது குறித்து அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் அந்தந்த மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் அறிவுறுத்த வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மத்திய சிறை வளாகத்தில் டிரோன் கேமராக்கள் மூலம்

# கண்காணிக்கும் புதிய திட்டத்தை தொடங்க தமிழக சிறைத்துறை முடிவு

சென்னை, நவ. 21–

மத்திய சிறை வளாகத்தில் டிரோன் கேமராக்கள் மூலம் கண்காணிக்கும் புதிய திட்டத்தை தொடங்க தமிழக சிறைத்துறை முடிவு எடுத்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள மத்திய சிறை வளாகங்கள் ஏற்கனவே சிசிடிவி கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. தற்போது சிறை வளாகம் முழுவதும் கண்காணிக்க டிரோன் கேமராக்கள் பயன்படுத்த சிறைத்துறை முடிவு செய்துள்ளது. சுற்றுச்சுவர் உட்பட சிறை வளாகத்தில் உள்ள அனைத்து பகுதிகளையும் டிரோன் கேமரா மூலம் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்புதலை பெற தமிழ்நாடு அரசுக்கு சிறைத்துறை அனுமதி கேட்டு கடிதம் எழுதியுள்ளது.

சிறைகளில் மோதல்கள், கஞ்சா உள்ளிட்ட சட்டவிரோத செயல்களை தடுக்க டிரோன் கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்படும். இந்த டிரோன் கேமராவை பறக்கவிட்டு அதன் மூலம் கண்காணிப்பதன் மூலம் சிறை வளாகத்தில் நடக்கும் அனைத்து காட்சிகளையும் துல்லியமாக கண்டுபிடிக்க முடியும். இதன் மூலம் அத்துமீறல்கள் குறைய வாய்ப்பு உள்ளது. அத்துடன் கைதிகள் சில அடாவடி செயல்களில் ஈடுபட்டால் அவற்றை ஆதாரப்பூர்வமாக கண்டுபிடிப்பதன் மூலம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்பு உள்ளது. இதனால் அவர்கள் அதுபோன்ற செயலில் ஈடுபடுவதை தவிர்க்க வாய்ப்பு இருக்கிறது. எனவே விரைவில் டிரோன் கேமரா வாங்கப்பட்டு அதை சிறை வளாகத்தில் பறக்கவிட்டு கண்காணிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக முதலீட்டாளர்கள் மாநாடை முன்னிட்டு... முதல் பக்க தொடர்ச்சி

நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை உலக முதலீட்டாளர்கள் மாநாடு நிகழ்வில் காட்சிப்படுத்துவதற்கும், அதன் மூலம் வாங்குபவர், விற்பனையாளர் மற்றும் பல்வேறு பங்குதாரர்களை இணைக்கும் தளமாக உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 அமையும்.

மேலும் இம்முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனங்களுக்கு அனைத்து விதமான அனுமதிகள் மற்றும் உரிமங்கள் ஆகியவற்றை அனைத்து துறைகளிடமிருந்து விரைவாக உரிய காலத்தில் பெற்றிட ஒற்றைச்சாளர தகவு வழியாக பெற்றுத்தர மாவட்ட தொழில் மையம், புதுக்கோட்டை மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு. வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி, மாவட்ட தொழில்மைய பொதுமேலாளர் திரிபுரசுந்தரி, புதுக்கோட்டை மாவட்ட சிறு தொழில் அதிபர்கள் நலச் சங்கத் தலைவர் ராஜ்குமார், தஞ்சாவூர் கயிறு வாரிய மண்டல விரிவாக்க மைய செயலாளர் குமார ராஜா, சிட்கோ தொழிற்பேட்டை கிளை மேலாளர் குணாளன், சிப்காட் தொழிற் பூங்கா திட்ட அலுவலர் கண்ணன், காரைக்குடி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக கிளை மேலாளர் எழில் பிரியா, நகரம் மற்றும் நாட்டுத் திட்டமிடல் துறை துணை இயக்குநர் பிரபாகரன், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை துணை இயக்குநர் ராஜா ஜெய்சிங், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் கே.செல்வக்குமார், மாவட்ட தொழில் மைய உதவிப் பொறியாளர் (தொழில்கள்) மதுசூதனன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியத்தின் சார்பில்

# பல்வேறு மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்



சென்னை : நவ. 21,
தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் பல்வேறு மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்துள்ளார்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ரூ.453.67 கோடியில் புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், 9 மாவட்டங்களில் 13 இடங்களில் 4,272 அடுக்குமாடி குடியிருப்புகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 4,680பேருக்கு ரூ.98.28 கோடி மதிப்பில் வீடுகள், ரூ.2.88 கோடி மதிப்பீட்டில் பயனாளிகள் பங்களிப்புடன் 72 நெசவாளர்களுக்கு வீடு, கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 100 மாற்றுத்திறனாளிகளுக்கு குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு செய்துள்ளனர். திருச்செங்கோடு, ஈரோடு, ராசிபுரம், பெருந்துறையில் கூட்டுறவு விற்பனை கிடங்குகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தானியங்கிவகைப்படுத்தும் மற்றும் தரப்படுத்தும் இயந்திரங்கள் கூடிய ஏல மையங்கள், ஆய்வுக்கூடம், நகர கூட்டுறவுக்கடன் சங்கங்களுக்கான கட்டடங்கள், திருமண மண்டபங்கள் ஆகியவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

## கேள்வி... முதல் பக்க தொடர்ச்சி

ஆர்.வேங்கடரமணி, ”பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்களை நியமிக்கும் விவகாரத்தில் ஆளுநரின் உரிமைகளைப் பறிப்பதுபோல் சட்ட மசோதா இருந்ததால், அவற்றை மறு ஆய்வு செய்யவே ஆளுநர் திருப்பி அனுப்பினார்” என்றார். அப்போது குறுக்கிட்ட நீதிமன்றம், 2020 ஜனவரியில் இருந்தே மசோதாக்கள் தேங்கியுள்ளன எனச் சுட்டிக்காட்டியது. அதற்கு அட்டர்னி ஜெனரல், ”ஆர். என்.ரவி 2021 நவம்பரில்தான் தமிழக ஆளுநராகப் பொறுப்பேற்றார்" என்று வாதிட்டார். பதிலுக்கு உச்ச நீதிமன்ற அமர்வு, ”இங்கே பிரச்சினை ஒரு குறிப்பிட்ட ஆளுநர் மசோதாக்களை தேக்கிவைத்தார் என்பதல்ல; ஏன் பொதுவாக அளுநர்கள் மசோதாக்களை தேக்கி வைக்கின்றனர் என்பதுதான்” என்று சுட்டிக் காட்டியது.

அப்போது, ஆளுநர் திருப்பியனுப்பிய மசோதாக்கள் மீண்டும் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து, ஆளுநரின் அடுத்தக்கட்ட நடவடிக்கைக்காக காத்திருப்பதாகக் கூறி வழக்கை டிசம்பர் 1-ஆம் தேதிக்கு உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்தது.

வழக்கு பின்னணி: தமிழக சட்டப்பேரவையில் கடந்த இரண்டரை ஆண்டுகளாக பல்வேறு சட்ட மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டன. ஆனால், 10-க்கும் மேற்பட்ட மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்கவில்லை. இந்நிலையில், சட்ட மசோதாக்களுக்கு அனுமதியளிப்பதற்கு ஆளுநருக்கு கால நிர்ணயம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி, ஆளுநர் ஆர். என்.ரவிக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மனு தாக்கல் செய்தது. இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், சட்டப்பேரவை நிறைவேற்றி அனுப்பும் மசோதாவை கிடப்பில் போடுவது கவலைக்குரியது என்று தெரிவித்தது. எதுவும் செய்யாமல் கோப்புகளைக் கிடப்பில் போட முடியாது என்றும் கருத்து தெரிவித்தது.

இந்தச் சூழலில், உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு நிலுவையில் உள்ளதாக தெரிவித்த பல்கலைக்கழகங்கள் திருத்த மசோதா உள்ளிட்ட 10 மசோதாக்களை தமிழக அரசுக்கு ஆளுநர் திருப்பி அனுப்பினார். இதனையடுத்து, தமிழக சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டம் கடந்த 18-ம் தேதி கூட்டப்பட்டு முதல்வர் கொண்டுவந்த அரசின் தனித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்மூலம் அந்த 10 மசோதாக்களும் மீண்டும் நிறைவேற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

### ‘செந்தில் பாலாஜிக்கு ஆபத்து...’ என வாதம்

# மருத்துவ அறிக்கை தாக்கல் செய்ய உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, நவ. 21-
அமைச்சர் செந்தில் பாலாஜி ஜாமீன் கோரி தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், அவரது மருத்துவ அறிக்கைகளை தாக்கல் செய்ய உத்தரவிட்டு, விசாரணையை வரும் இம்மாதம் 28-ம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளது.

சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தடைச் சட்டத்தின்கீழ் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டுள்ள அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனுக்களை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் தள்ளுபடி செய்தன. இதையடுத்து, அவருக்கு ஜாமீன் கோரி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மேல்முறையீட்டு வழக்கு, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பீலா எம். திரிவேதி, சதீஷ் சந்திர ஷர்மா ஆகியோர் அடங்கிய அமர்வில் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, அமைச்சர் செந்தில் பாலாஜி தரப்பில் மூத்த வழக்கறிஞர் முகுல் ரோத்தகி ஆஜராகி, செந்தில் பாலாஜிக்கு இதய பிரச்சினை உள்ளது. அவரது உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, அவருக்கு தற்போது இடைக்கால ஜாமீனாவது வழங்க வேண்டும்.

மேலும், அவருக்கு பைபாஸ் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. எனவேதான் இந்த மனு மருத்துவ காரணங்களுக்காகத்தான் தாக்கல் செய்யப்பட்டது. தற்போது அவருக்கு இருக்கும் இதயக் குழாய் அடைப்புக்கு உரிய சிகிச்சை வழங்கவில்லை என்றால், அது அவருக்கு ஆபத்தாக முடியும். குறிப்பாக, உரிய சிகிச்சை வழங்கவில்லை என்றால் அவர் 'பக்கவாதம் நோக்கு' தள்ளப்படுவார்" என்று வாதிட்டார்.

அப்போது அமலாக்கத் துறை தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, "மருத்துவ அறிக்கையில், செந்தில் பாலாஜிக்கு மருத்துவமனையில் அனுமதித்து தான் சிகிச்சை வழங்க வேண்டும் என்று எங்கும் கூறவில்லை" என்றார். இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், அமைச்சர் செந்தில் பாலாஜியின் எம்ஆர்ஐ ஸ்கேன் அறிக்கை உள்ளிட்ட மருத்துவ அறிக்கைகள் மற்றும் சிகிச்சை தொடர்பான விவரங்களைத் தாக்கல் செய்ய உத்தரவிட்டு, விசாரணையை வரும் நவம்பர் 28-ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.



▶ புளியங்குடி, டி.டி.டி.ஏ நடுநிலைப் பள்ளியில் சர்வதேச குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு வட்டாரக் கல்வி அலுவலர் மாரியப்பன் தலைமை வகித்து, குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட குழந்தைகளின் உரிமைகள் 1989 நவம்பர் 20ல் வெளியிடப்பட்டதால் நவம்பர் 20 உலக குழந்தைகள் தினமாக அனுசரிக்கப்படுவதையும் குழந்தைகள் உரிமைகள், சட்டங்கள் பற்றிய கருத்துகளை மாணவர்கள்களுக்கு தெளிவாக எடுத்துரைத்தார்.

### இபிஎஸ் தலைமையில் இன்று

# அதிமுக மாவட்டச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள் கூட்டம்



சென்னை : நவ. 21-
சென்னையில் உள்ள அதிமுக கட்சி தலைமை அலுவலகத்தில், இன்று கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறும் என்று அக்கட்சியின் தலைமைக்கழகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், அதிமுக பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தமிழக முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி தலைமையில், பூத் கமிட்டி, இளைஞர் பாசறை, இளம் பெண்கள் பாசறை மற்றும் மகளிர் அமைப்புகளை ஏற்படுத்தியதற்கான களப் பணி குறித்து மாவட்டப் பொறுப்பாளர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம், ஏற்கெனவே அறிவித்தபடி தலைமைக் கழகத்தில் உள்ள எம்ஜிஆர் மாளிகையில், இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வல்லத்திராகோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ்க்கூடல் விழா



புதுக்கோட்டை , நவ.21-
புதுக்கோட்டை மாவட்டம், வல்லத்திராகோட்டை, இராமசாமி தெய்வானை அம்மாள் அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழ்க்கூடல் விழா நடைபெற்றது.

விழாவில் பள்ளித் தலைமை ஆசிரியர் குமார் தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக காரைக்குடி ஓ சிறுவயல் மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியர் பாரதிதாசன் சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார். தமிழின் சிறப்புகளையும், தமிழனின் பெருமையையும் ஒவ்வொரு மாணவனும் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும், அதற்கு தமிழ் இலக்கியம் உதவும் என்றும் அதை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும் எனவும் வாழ்க்கையை எளிமையாக, மகிழ்ச்சி உள்ளதாக ஆக்கிக்கொள்ள இலக்கியம் உதவும் என்றும் வாழ்த்தி இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி வாழ்த்தினார்.

உதவித் தலைமை ஆசிரியர் குணசேகரன் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினார். முதுகலைத் தமிழ் ஆசிரியர் ரகமது நிஷா வரவேற்புரை ஆற்றினார். பட்டதாரி தமிழ் ஆசிரியர் முனைவர் வனிதா நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். முதுகலை ஆங்கில ஆசிரியர் ஆண்டனி மற்றும் ஆசிரியர் பெருமக்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

# அன்னவாசல் அருகே துடையூர் கிராமத்தில் விவசாயிகளுக்கான கிராம அளவிலான விழிப்புணர்வு முகாம்



அன்னவாசல்,நவ.21-
புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் வட்டாரம், துடையூர் கிராமத்தில் நேற்று விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பாக விவசாயிகளுக்கான கிராம அளவிலான விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது, துடையூர் ஊராட்சி மன்றத் தலைவர் முன்னிலையில் இக்கூட்டம் நடைபெற்றது. இம்முகாமில் துடையூர், பனிக்கொண்டான்பட்டி, பாரைப்பட்டி, துடையூர் ஏடி காலனி,திடீர் நகர் மற்றும் தக்கிரிப்பட்டி முதலான குக்கிராமங்களிலிருந்து பல்வேறு விவசாயிகள் திரளாக பங்கேற்றனர்.

இந்த முகாமில் வேளாண் வணிகத்தறையின் திட்டங்களான வேளாண் உட்கட்டமைப்பு நிதி குறித்து அலுவலர்களால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

முன்னதாக வேளாண்மை விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் மூலம் விற்பனை செய்திட கேட்டுக் கொள்ளப்பட்டது, தேசிய வேளாண் சந்தை பண்ணை வணிகம் பற்றி விளக்கப்பட்டது, மேலும் இம்முகாமில் அன்னவாசல் வட்டார வேளாண்மை அலுவலார் மற்றும் நார்த்தாமலை பிர்கா உதவி தோட்டக்கலை அலுவலர் கலந்து கொண்டு வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலை துறைகளின் திட்டங்களை எடுத்துரைத்தனர்.

விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலர்கள், விவசாயிகளை அவர்களது இல்லங்களுக்கே சென்று சந்தித்து திட்டம் சார்ந்த துண்டு பிரசுரங்களை வழங்கி விவசாயிகள் பயன்பெற கேட்டுக் கொண்டனர், வேளாண்மைவிற்பனைமற்றும் வேளாண் வணிகத்துறை, விற்பனைக்குழு,வேளாண்மை-உழவர் நலத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை முதலான துறை சார்ந்த அனைத்து அலுவலர்களும் இம்முகாமில் கலந்து கொண்டனர்.

# மேலநீலிதநல்லூர் அருகே ரூ.2 கோடி 57 லட்சம் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணி

### எம்எல்ஏ ராஜா துவக்கி வைத்தார்



சங்கரன்கோவில். நவ.21-
தென்காசி மாவட்டம் மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட குருக்கள்பட்டி முதல் மேலநீலிதநல்லூர் வரை தேசிய நெடுஞ்சாலை திட்டத்தின் கீழ் ரூ.2 கோடியே 57 லட்சம் மதிப்பீட்டிலான சாலை மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி துவக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் பெரியதுரை தலைமை வகித்தார், நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் உலகம்மாள் முன்னிலை வகித்தார்.

இதில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு சாலை அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார், நிகழ்ச்சியில் உதவி பொறியாளர் பலவேசம், மேலநீலிதநல்லூர் கிளை கழக செயலாளர் சண்முகப்பாண்டியன் ,ஒன்றிய பிரதிநிதி வெள்ளத்துரை, ஆத்மா, சேர்மன், கணேசன் ,மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் முத்துப்பாண்டியன், முருகன் மற்றும் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் வெள்ளத்துரை ஒப்பந்ததாரர் சண்முகாதேவி, வீரபாண்டியன், அழகியபாண்டியபுரம் கண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டையில் சிட்டி ரோட்டரி சங்கம் சார்பாக இரத்ததான முகாம்



புதுக்கோட்டை, நவ.21-
புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கம் சார்பாக புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் சங்கத் தலைவர் அசோகன் தலைமையில் இரத்ததானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது முன்னதாக வருகை தந்த அனைவரையும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கத் தலைவர் மாருதி கண.மோகன் ராஜா வரவேற்றார் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கச் செயலாளர் இப்ராஹிம் பாபு, பொருளாளர் பிரசாத், புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கச் செயலாளர் முத்தன் அரசகுமார், நகர்மன்ற உறுப்பினர் ராஜா முஹம்மது, வருங்கால செயலாளர் ஓம்ராஜ், முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக இரத்த வங்கி அலுவலர் மருத்துவர் சரவணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இரத்ததான முகாமினை துவக்கி வைத்தார் சக்திகணேஷ் இரத்த கொடையாளர் மற்றும் இரத்த ஒருங்கிணைப்பாளர் சதிஷ்குமார் தலைமையில் இரத்த கொடையாளர்கள் சூரியபிரகாஷ், ராஜிவ், மதன் ஆகியோர் இரத்த தானம் செய்தனர் நிறைவாக சங்கப் பொருளாளர் நன்றி கூறினார்.

# புதுக்கோட்டையில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் திறப்பு விழா





புதுக்கோட்டை,21-
புதுக்கோட்டை யில் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்சி நிறுவனம் திறப்பு விழா எஸ்.எஸ் நகரில் நடைபெற்றது, நிகழ்வுக்கு எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி ஆர்.ராஜ்குமார் தலைமை வகித்தார், முன்னோடி விவசாயி ச.வே.காமராசு முன்னிலை வகித்தார், புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் எம். பெரியசாமி, இந்திய விவசாய சங்கத்தின் பொது செயலாளர் மற்றும் முன்னோடி விவசாயி ஜி.எஸ்.தனபதி ஆகியோர் புதிய அலுவலகத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினர்.

வேளாண்மை இணை இயக்குநர் தனது சிறப்புரையில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் விவசாயிகளுக்காகவும், கிராமபுற மக்களுக்காகவும் பல்வேறு பயனுள்ள திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது, புதுக்கோட்டை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மற்றும் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றோம், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன செயல்பாடுகளுக்கு வேளாண்மைத்துறை தேவையான ஒத்துழைப்பை நல்கும் என்றார். எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி ஆர்.ராஜ்குமார் தனது தலைமையுரையில் எம்.எஸ்சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிகள் அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்புடன் விரிவடைந்துள்ளது. விரைவில் “ஒவ்வொரு குழந்தையும் ஒரு விஞ்ஞானி” என்ற திட்டம் செயல்படுத்தபடவுள்ளது. எனவே புதிய திட்டங்களுக்கு வசதியாக இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில், அறிவியல் இயக்க மாநில செயலாளர் எஸ். டி.பாலகிருஷ்ணன், மாவட்ட செயலாளர் எம்.முத்துகுமார், மார்க்சிஸ்ட் கம்னியூஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.கவிவர்மன், கவிஞர்.நா.முத்துநிலவன், ஆசிரியர் மனசு பெட்டி மாநில ஒருங்கிணைப்பாளர் சிகரம் சதீஸ்குமார், அரிமளம் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் மேகலா அறிவியல் இயக்க முன்னோடி லெ.பிரபாகரன், வேளாண்மை அலுவலர் சி.முகமது ரபீக், குழந்தைகள் நலக்குழுத்தலைவர் க. சதாசிவம், நேரு யுவகேந்திரா மாவட்ட இளையோர் ஒருங்கிணைப்பாளர் கே.ஜோயல்பிராபகரன், பேராசிரியர்.எஸ்.விஸ்வநாதன், கவிஞர்.மு.கீதா உள்ளிட்ட பலர் வாழ்த்துரை வழங்கினர், நிகழ்வில் விவசாயிகள், ஊராட்சி பிரதிநிதிகள், அறிவியல் இயக்க பிரதிநிதிகள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் ஆசிரியர்கள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள், கள ஒருங்கிணைப்பாளர் டி.விமலா அனைவரையும் வரவேற்றார், தொழில்நுட்ப அலுவலர் ஆர். வினோத்கண்ணா நன்றி கூறினார்.

# ஜெயங்கொண்டம் நகரில் ஆர்எஸ்எஸ் பேரணி



அரியலூர், நவ.21-
ஜெயங்கொண்டம் நகரில் ஆர் எஸ் எஸ் பேரணி நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் நகரில், அரியலூர் மாவட்ட ஆர். எஸ்.எஸ்., சார்பாக பேரணி நடைபெற்றது, ஜெயங்கொண்டம் வேலாயுத நகர் ராஜேந்திர சோழன் திடலில் துவங்கிய ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங் எனப்படும் ஆர் எஸ் எஸ் அணிவகுப்பு பேரணி, தா பழூர் சாலை, பஸ் ஸ்டாண்ட் ரோடு, சன்னதி தெரு, கடைவீதி, நான்கு ரோடு உள்ளிட்ட முக்கிய வீதிகளில் வழியாக, பேண்டு வாத்தியம் இசைத்தபடி, அணிவகுப்பு பேரணி நடைபெற்றது. இதனை ஆர் எஸ் எஸ், மாநில சமூக நல நல்லிணக்க பொறுப்பாளர் ராஜேந்திரன் மற்றும் நிரங்காரி குமரகுரு ஆகியோர் கொடிசைத்து தொடங்கி வைத்தனர்.

ஆர்.எஸ்.எஸ் தொண்டர்கள் ஜெயங்கொண்டம் நகரின் முக்கிய வீதிகள் வழியாக, ராணுவ கட்டுபாட்டுடன் அணிவகுத்து சென்றனர்.

அணிவகுப்பு பாதையில் மகளிர் பலரும், மலர் தூவி வாழ்த்தினர்.

ஆர் எஸ் எஸ் அணிவகுப்பு பேரணி துவக்கத்தில், பாரத மாதா, ஆர்எஸ்எஸ் நிறுவனர் குருஜி கோல்வல்கர் மற்றும் ஆர்.எஸ்.எஸ் தலைவர்களின் உருவப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன, அலங்கார ஊர்தி முன்னே செல்ல, தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் அணிவகுத்து சென்றனர்.

ஜெயங்கொண்டம் நகரில் நடைபெற்ற ஆர்.எஸ்.எஸ் அணி வகுப்பில், 300-க்கும் மேற்பட்ட ஆர் எஸ் எஸ் தொண்டர்கள் சீருடை அணிந்து பங்கேற்றனர்.

இந்த அணிவகுப்பு பேரணி, ஜெயங்கொண்டம் பெருமாள் கோயிலுக்கு முன்பாக நிறைவடைந்தது, இதைதொடர்ந்து ஜெயங்கொண்டம் பெருமாள் கோயில் அருகில்,பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக் கூட்டத்தில் ஆர்.எஸ்.எஸ் மாநில சமூக நல நல்லிணக்க பொறுப்பாளர் ராஜேந்திரன் சிறப்புரையாற்றினார்.

முன்னதாக பெருமாள் கோவில் வளாக திடலில் ஆர்எஸ்எஸ் கொடியை ஏற்றி வைத்தனர், அணிவகுப்பு பேரணி மற்றும் பொதுக்கூட்டத்திற்கு, ஆர் எஸ் எஸ் உறுப்பினர் செல்வம் தலைமை தாங்கினார். சங்க உறுப்பினர் விஜயகுமார் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். ஆர் எஸ் எஸ் மாவட்ட செயலாளர் ஞான கார்த்திகேயன் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டார், அணிவகுப்பு பேரணி மற்றும் பொதுக்கூட்டத்தில், பாரதிய ஜனதா கட்சி மாவட்டத்தலைவர் அய்யப்பன், மாவட்ட துணைத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட பொதுச் செயலாளர் வழக்கறிஞர் ஜெயக்குமார், நகரத் தலைவர் ராமர், மாவட்டச் செயலாளர் இளையராஜா மற்றும் மாநில, மாவட்ட, நகர நிர்வாகிகள், இந்து முன்னணி, விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

ஜெயங்கொண்டம் நகரம் முழுவதும், மாலையில் தொடங்கிய ஆர் எஸ் எஸ் அணிவகுப்பு பேரணி மற்றும் பொதுக்கூட்டம் முடியும் வரை, அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஃபெரோஸ்கான் அப்துல்லா மேற்பார்வையில், ஜெயங்கொண்டம் போலீஸ் துணை காவல் கண்காணிப்பாளர் ரவிச்சந்திரன் தலைமையில், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள், போலீஸ் ஏட்டுகள் மற்றும் ஏராளமான போலீசார் உள்பட, 500 க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த பட்டிருந்தனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# "தோல்வி விளையாட்டின் ஒரு பகுதிதான் இந்திய அணி தனது முழு திறனையும் வெளிப்படுத்தியது" – சச்சின்



**புதுடெல்லி : நவ. 21,**

**நடப்பு கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணி தோல்வியை தழுவி உள்ளது. இந்த சூழலில் 6-வது முறையாக உலகக் கோப்பையை வென்ற ஆஸ்திரேலியாவுக்கு சச்சின் டெண்டுல்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

ஐசிசி உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் 13-வது பதிப்பின் இறுதி ஆட்டம் 1.30 லட்சம் பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய உலகின் மிகப்பெரிய மைதானமான அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் 5 முறை சாம்பியனான ஆஸ்திரேலியாவை, 2 முறை சாம்பியனான இந்தியா எதிர்கொண்டது. இதில், ஆஸ்திரேலிய அணி நடப்பு உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளது . இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி ஆறாவது முறையாக கோப்பையை தட்டிச் சென்றுள்ளது .

நடப்பு கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணி தோல்வியை தழுவி உள்ளது. இந்தச் சூழலில் சச்சின் டெண்டுல்கர் இது குறித்து தன்னுடைய எக்ஸ் பக்கத்தில், "ஆறாவது முறையாக உலகக் கோப்பையை வென்ற ஆஸ்திரேலிய அணிக்கு என்னுடைய வாழ்த்துகள். கிரிக்கெட்டின் மிக முக்கியமான உலக கோப்பை இறுதிப்போட்டியில் அவர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அசத்தியுள்ளனர்.

திறமையான ஆட்டத்தை தொடர் முழுவதும் வெளிப்படுத்தி ஆதிக்கம் செலுத்திய இந்திய அணிக்கு, ஒரு மோசமான நாள் பலரின் இதயங்களை நொறுக்கி விட்டது. இந்திய வீரர்கள், ரசிகர்கள் எவ்வளவு வேதனையையும், கஷ்டத்தையையும் அனுபவிக்கிறார்கள் என்பதை என்னால் உணர முடிகிறது. தோல்விகள் விளையாட்டின் ஒரு பகுதிதான். அதேநேரத்தில் கோப்பையை கைப்பற்றுவதற்காக ஒட்டுமொத்த இந்திய அணியும் தங்களது முழு திறனையும் வெளிப்படுத்தி, இந்தத் தொடர் முழுமைக்கும் சிறப்பாக செயல்பட்டதை நினைவு கூர்வோம்" என்று தெரிவித்துள்ளார்.

# ஏ.டி.பி. டென்னிஸ் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி
## பட்டத்தை கைப்பற்றிய ஜோகோவிச்



**துரின் : நவ. 21,**

**தரவரிசையில் முதல் 8 இடம் வகிக்கும் வீரர்கள் மட்டுமே கலந்துகொண்ட ஏ.டி.பி. இறுதி சுற்று எனப்படும் ஆண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி இத்தாலியில் உள்ள துரின் நகரில் நடைபெற்றது. இதில் பங்கேற்றிருந்த வீரர்கள் ரெட், கிரீன் என்று இரு பிரிவாக பிரிக்கப்பட்டிருந்தனர்.**

ஒவ்வொரு வீரரும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற வீரர்களுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். 'ரவுன்ட்-ராபின்' முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிப்போர் அரையிறுதிக்கு தகுதி பெறுவார்கள். அதன்படி நடைபெற்றலீக் ஆட்டங்களின் முடிவில் 'கிரீன்' பிரிவில் ஜோகோவிச் மற்றும் சின்னர் அரையிறுதிக்கு தகுதி பெற்றனர். 'ரெட்' பிரிவில் கார்லஸ் அல்காரஸ் மற்றும் டேனியல் மேத்வதேவ் அரையிறுதிக்கு தகுதி பெற்றனர்.

அதன்படி நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இத்தாலி வீரர் சின்னர், ரஷிய வீரரான மேத்வதேவை வீழ்த்தி இறுதி போட்டிக்கு முன்னேறினார். தரவரிசையில் நம்பர் 1 வீரர் செர்பியாவை சேர்ந்த ஜோகோவிச் ஸ்பெயின் வீரரான கார்லஸ் அல்காரசை வீழ்த்தி இறுதி போட்டிக்கு முன்னேறினார்.

இறுதி போட்டியில் சின்னர் மற்றும் ஜோகோவிச் பலப்பரீட்சை நடத்தினர். இதில் ஜோகோவிச் 6-3 மற்றும் 6-3 என்ற நேர் செட் கணக்கில் சின்னரை எளிதில் வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார். ஜோகோவிச் இந்த பட்டத்தை வெல்வது இது 7-வது முறையாகும்.

# சிறந்த பீல்டர் விருதை தட்டிச் சென்ற விராட்



**அகமதாபாத் : நவ. 21,**

**உலகக்கோப்பை இறுதி போட்டி அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அரங்கேறியது. இந்த போட்டியில் ஆஸ்திரேலியா 6 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி உலகக்கோப்பையை வென்றது. டிராவிஸ் ஹெட் ஆட்டநாயகன் விருதையும், இந்திய வீரர் விராட் கோலி தொடர்நாயகன் விருதையும் பெற்றனர்.**

உலகக்கோப்பை தொடரின் ஒவ்வொரு ஆட்டத்திலும் சிறப்பாக பீல்டிங் செய்யும் இந்திய வீரருக்கு பிசிசிஐ சார்பில் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டு வந்தது. அதன்படி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி போட்டியில் சிறந்த பீல்டராக விராட் கோலி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அவர் இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வீரர் டேவிட் வார்னர் அடித்த பந்தை ஸ்லிப் திசையில் நின்று அற்புதமாக பிடித்தார். அதனால் அவர் சிறந்த பீல்டராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு தங்கப்பதக்கத்தை கடந்த ஆட்டத்தில் சிறந்த பீல்டராக தேர்வு செய்யப்பட்ட ஜடேஜா வழங்கி கவுரவித்தார்.

முன்னதாக இந்த உலகக்கோப்பை தொடரில் இந்திய அணிக்கான முதல் ஆட்டத்திலும் சிறந்த பீல்டராக விராட் கோலி தேர்வு செய்யப்பட்டு தங்கப்பதக்கம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகக்கோப்பை கால்பந்து தகுதி சுற்று
## இந்தியா–கத்தார் அணிகள் இன்று மோதல்



**புதுடெல்லி : நவ. 21,**

**ஆண்களுக்கான உலகக்கோப்பை கால்பந்து தொடர் 2026-ம் ஆண்டு நடைபெற உள்ளது.**

அதற்கான ஆசிய மண்டல தகுதி சுற்றின் 2-வது சுற்றில் 36 அணிகள் பங்கேற்று உள்ளன. அவை 9 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு தங்களுக்குள் தலா 2 முறை லீக்கில் மோதுகின்றன. இதன் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் 3-வது சுற்றுக்கு முன்னேறும். 2-வது சுற்று ஆட்டங்கள் பல்வேறு நாடுகளில் நடைபெறுகின்றன.

இந்தியா 'ஏ' பிரிவில் கத்தார், குவைத் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுடன் இடம்பெற்றுள்ளது. இதில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் சுனில் சேத்ரி தலைமையிலான இந்திய அணி குவைத் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது.

இந்நிலையில் இந்திய அணி தனது அடுத்த ஆட்டத்தில் பலம் வாய்ந்த கத்தார் அணியுடன் இன்று பலப்பரீட்சை நடத்த உள்ளது. 'ஏ' பிரிவின் புள்ளி பட்டியலில் கத்தார் அணி முதலிடத்திலும், இந்திய அணி 2-வது இடத்திலும் உள்ளன. இன்றைய ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி பெற்றால் முதலிடத்திற்கு முன்னேறும்.

வரலாறு சினிமா

# "காக்கா, கழுகு கதைகளால் எந்தப் பயனும் இல்லை"
## லெஜெண்ட் சரவணன் கருத்து



**சென்னை : நவ. 21,**

**காக்கா, கழுகு கதைகளால் யாருக்கும் எந்த பிரயோஜனமும் இல்லை. நாம் உழைத்தால் மட்டுமே உயர முடியும் என்று நடிகர் லெஜெண்ட் சரவணன் பேசியுள்ளார்.**

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் 5 அடுக்குகள் கொண்ட மாநில தலைமை அலுவலக கட்டிடம் சென்னை கே.கே.நகரில் கட்டப்பட்டுள்ளது. அதன் திறப்பு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன், லெஜண்ட் சரவணன், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் நடிகர் லெஜெண்ட் சரவணன் பேசியதாவது: "எந்தவொரு நாட்டில் வியாபாரத் துறை செழிப்பாக உள்ளதோ அந்த நாட்டில்தான் பொருளாதாரமும் சிறப்பாக இருக்கும். ஏனெனில் அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான பொருளாதார சுழற்சியில் இந்த வியாபாரத் துறை மிகமுக்கிய பங்காற்றி வருகிறது. நம் நாட்டில் வியாபாரத் துறை செழிப்பாக இருந்தால், நம் நாட்டின் பொருளாதாரமும் பலமாக இருக்கும். இதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். ஒரு வெற்றிகரமான வியாபாரத்துக்கு அதில் இருக்கும் உண்மைத்தன்மையும், கடின உழைப்பும் தான் முக்கிய காரணமாக இருக்கும்.

இன்று மக்களின் பொழுதுபோக்கு அம்சங்களில் சினிமா மிக சிறப்பாக் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் அதில், காக்கா, கதைகள், இவருக்கு அந்த பட்டம், அவருக்கு இந்த பட்டம் இதில் எல்லாம் யாருக்கும் எந்த பிரயோஜனமும் கிடையாது. நாம் உழைத்தால் மட்டுமே உயர முடியும். நாம் உயர்ந்தால் நம் நாடும் உயரும்." என்று லெஜண்ட் சரவணன் பேசினார்.

'ஜெயிலர்' படத்தின் ஆடியோ விழாவில் ரஜினி கூறிய காக்கா, கழுகு கதையால் விஜய் ரசிகர்களுக்கும், ரஜினி ரசிகர்களுக்கு சமூக வலைதளங்களில் மோதல் ஏற்பட்டது. இதையடுத்து 'லியோ' படத்தில் வெற்றிவிழாவிலும் காக்கா, கழுகு என்ற வார்த்தையை விஜய் பயன்படுத்தியது விவாதமானது. இந்த சூழலில், இந்த சம்பவங்களைத்தான் லெஜெண்ட் மறைமுகமாக குறிப்பிடுவதாக நெட்டிசன்கள் பதிவிட்டு வருகின்றனர்.

# "கருத்து சொல்ல உரிமை உண்டு"
## ஆன்லைன் விமர்சனங்களுக்கு மம்மூட்டி ஆதரவு




**கொச்சி : நவ. 21,**

**"ஒவ்வொரு தனிநபருக்கும் அவரது கருத்துகளை வெளிப்படுத்த உரிமை உண்டு. ஆனால், அந்தக் கருத்துகள் அவர்களது கருத்துகளாக இருக்கவேண்டும்" என நடிகர் மம்மூட்டி தெரிவித்துள்ளார்.**

ஜியோ பேபி இயக்கத்தில் மம்மூட்டி - ஜோதிகா நடித்துள்ள 'காதல் தி கோர்' மலையாள படம் வரும் 23-ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இந்நிலையில், கொச்சியில் நடந்த படத்தின் புரமோஷன் நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய நடிகர் மம்மூட்டி, "திரைப்படங்களை பார்த்து விமர்சனம் செய்யட்டும். ஒவ்வொரு தனிநபருக்கும் அவரது கருத்துகளை வெளிப்படுத்த உரிமை உண்டு. ஆனால், அது அவர்களின் சொந்தக் கருத்துக்களாக இருக்க வேண்டும். வெளிப்புற அழுத்தங்களாலோ, மற்றவர்களின் உந்துதல் காரணங்களாகவோ அந்த விமர்சனங்கள் இருக்கக் கூடாது. ஆன்லைன் விமர்சனங்களை தடை செய்வதால் திரையுலகை காப்பாற்றிவிட முடியும் என நான் நினைக்கவில்லை. அதேபோல, ஒரு படத்தின் முடிவு என்பது ஆன்லைன் விமர்சனங்களால் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது என்பதிலும் எனக்கு நம்பிக்கையில்லை" என்று மம்மூட்டி பேசினார்.

அப்போது அருகிலிருந்த படத்தின் இயக்குநர் ஜியோ பேபி, "இன்றைக்கு பல ஆன்லைன் கன்டென்ட் கிரியேட்டர்கள் உருவாகிவிட்டனர். என்னை பொறுத்தவரை நான் ஆன்லைன் சினிமா விமர்சனங்களை பொருட்படுத்துவதில்லை" என பேசிக்கொண்டிருக்க, அவரிடம் குறுக்கிட்ட மம்மூட்டி, "அவர்கள் செய்துவிட்டு போகட்டும். என்னபிரச்சினை?" என கூற, ஜியோ பேபி, "ஆனால், நான் அவர்களுக்கு மதிப்பளிப்பதில்லை" என்றார்.

ஜோதிகா பேசுகையில், "கண்ணூர் ஸ்குவாட் பார்த்தேன் சிறப்பாக இருந்தது. நிறைய நடிகர்களுடன் பணியாற்றியிருக்கிறேன். ஆனால், மம்மூட்டியுடன் பணியாற்றியது ஸ்பெஷல் அனுபவம். இங்கே இருக்கிறேன் என சொல்லவில்லை. நிஜமாகவே சொல்கிறேன். அவர் மிகவும் ரிலாக்ஸான நடிகர். நிறைய வித்தியாசமான முயற்சிகளை செய்து பார்ப்பவர். அவருடன் பணியாற்றியது பெருமையாக உள்ளது" என்றார்.

# "நான் தரையில் பேசுவதை தம்பிகள் திரையில் பேசியுள்ளனர்"
## 'ஜிகர்தண்டா XX' படத்துக்கு சீமான் பாராட்டு



**சென்னை : நவ. 21,**

**கார்த்திக் சுப்பராஜ் இயக்கியுள்ள 'ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்' படத்துக்கு நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் பாராட்டு தெரிவித்துள்ளார்.**

இது குறித்து சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: "ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்" பூர்வகுடிமக்களின் வலிமிகுந்த வாழ்வியல் காவியம். அன்புத்தம்பி கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில், தம்பிகள் எஸ்.ஜே.சூர்யா, ராகவா லாரன்ஸ் ஆகியோர் இரு கதாநாயகர்களாக நடித்து வெளிவந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்' திரைப்படத்தின் சிறப்புக் காட்சியைக் கண்டுகளித்தேன். உலகெங்கும் பூர்வகுடி மக்கள் அன்றாடம் சந்தித்து வரும் மிக முக்கிய வாழ்வியல் சிக்கலை கதைக்களமாக கொண்டு, தற்காலச் சூழலில் சொல்லப்பட வேண்டிய மிக அழுத்தமான கருத்தினை மிக அழகாக திரையில் காட்சிப்படுத்தியுள்ளார் தம்பி கார்த்திக் சுப்புராஜ்.

'நீரின்றி அமையாது உலகு' என்று வள்ளுவப் பெருந்தகை கூறியது எந்த அளவிற்கு உண்மையோ, காடின்றி அமையாது நாடு என்பதும் அதே அளவிற்கு உண்மை. அதனாலேயே மற்றொரு குறளில் "மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடையது அரண்" என்கிறார். அந்த வகையில் காடு மனிதர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து உயிர்களுக்கும் மிக முக்கியமானது என்பதனை இத்திரைப்படம் வலியுறுத்துகிறது. அங்கு வாழும் பழங்குடி மக்களின் வாழ்வியலை அழுத்தமான உரையாடல்களோடு இத்திரைப்படத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது மிகச்சிறப்பானது.

யானைகள் இல்லாமல் காடு இல்லை! காடு இல்லாமல் நாடு இல்லை! என்பவை போகிற போக்கில் சொல்லிவிட்டு போகிற செய்தியல்ல. மிகப்பெரிய புவியியல் உண்மையாகும். நாம் வாழும் பூமி 70 விழுக்காடு நீரால் சூழப்பட்டுள்ளது. 30 விழுக்காடுதான் நிலத்தால் ஆனது. அதில் பெரும்பகுதி காடுகள்தான். மனிதர்கள் நாம்தான் சமூக விலங்காக மாறிவிட்டோம். ஆனால் கோடிக்கணக்கான உயிரினங்கள் இன்றளவும் காடுகளை நம்பியே வாழ்கின்றன. அத்தகைய அதிமுக்கியத்துவம் வாய்ந்த பல்லுயிர்ப் பெருக்க வாழ்விடமாக விளங்கக்கூடிய வனங்களையும், அதன் வளங்களையும் அழித்தொழிப்பதென்பது எத்தகைய பேராபத்தினை ஏற்படுத்தும் என்பதை மிக ஆழமாக பதிவுசெய்துள்ளர் தம்பி கார்த்திக் சுப்பராஜ்.

இதை வெறும் படம் என்று கூறிவிட முடியாது. நம் அனைவருக்குமான பாடம். நாம் காட்டுவாசி, ஆதிவாசி என்றெல்லாம் வாய்மொழியாக கூறிவிடுகிறோம். உண்மையில் அவர்கள் மலைவாழ் மக்கள். நம் மண்ணின் தொல்குடி மக்கள். காடும், காடு சார்ந்த நிலத்திற்கும் பாதுகாப்பு அரணே அவர்கள்தான். ஆனால் இன்றைக்கு வளவேட்டைக்காக முதலில் பலியிடப்படுவதும் அம்மக்கள்தான். தண்டகாரண்யத்தில் பச்சை வேட்டை என்றொரு திட்டத்தைத் தொடங்கி அங்கு இருக்கும் 250 இலட்சம் கோடி மதிப்பிலான வளங்களை எடுப்பதற்காக அங்கு வாழும் மக்களை அப்புறப்படுத்த முனைந்தபோது, உங்களுக்கு இதுகாடு, எங்களுக்கு இதுவீடு இதை விட்டு செல்லமாட்டோம் என்று மறுத்துவிட்டனர். அந்த கருத்தைத்தான் இத்திரைப்படமும் வலியுறுத்துகிறது.

என் மண், என் நிலம், என்னுடைய வாழ்விடம் அதைவிட்டு ஒருபோதும் செல்ல முடியாது, உயிர் போனாலும் இந்த மண்ணில்தான் என்று படம் பேசும் கருத்தில்தான் ஒவ்வொரு தேசிய இனங்களின் போராட்டமும் தொடங்கியது. அதுதான் நேற்று ஈழத்தில் நடந்தது. இன்று பாலஸ்தீனத்திலும் நடைபெறுகிறது. 'சூழலியலின் தாய்' வங்காரி மாதாய் உலகெங்கிலும் போர் என்பதே வள வேட்டைக்காகத்தான் நடைபெறுகிறது என்கிறார். அப்பேருண்மையைகுறிப்பிட்ட நேரத்திற்குள் திரைமொழியில் அழுத்தமாக சொல்ல முடிந்தது என்பதே இத்திரைப்படத்தின் மிகப்பெரிய சாதனையாகும்.

தம்பி கார்த்திக் சுப்பராஜால் மிகுந்த சமூக அக்கறையோடு எடுக்கப்பட்டுள்ள திரைப்படம் தான் ஜிகர்தண்டா டபுள் எக்ஸ். நான் தரையில் பேசுவதை தம்பிகள் திரையில் நேர்த்தியாக மொழிப்பெயர்த்துள்ளதைக் கண்டபோது. இத்திரைப்படம் என் இதயத்திற்கு நெருக்கமாக நேரடித் தொடர்பினை ஏற்படுத்திவிட்டது.

இத்திரைப்படத்தில் என்னுடைய தம்பி எஸ். ஜே.சூர்யா இதுவரை இல்லாத வகையில் நடிப்பில் புதியதொரு பாய்ச்சலை வெளிப்படுத்தியுள்ளார். மீண்டும் கதையின் நாயகனாக வேறு ஒரு பரிணாமத்தில் தோன்றி அசத்தியுள்ளார். அதைப்போன்று தம்பி ராகவா லாரன்ஸ்க்கும் இது முற்றிலும் மாறுதலான படமாக அமைந்துள்ளது. இரு நாயகர்களுமே போட்டி போட்டு நடித்து படத்தினை வெற்றிப்பெறச் செய்துள்ளனர். புதுமுகம் தம்பி விது அவர்களின் நடிப்பு வியக்க வைக்கிறது. மாமா இளவரசு மற்றும் கதையின் நாயகிகளான நிமிஷா சஜயன், சஞ்சனா நடராஜன் உள்ளிட்டோரின் நடிப்பும் படத்தினை மேலும் மெருகேற்றியுள்ளது. யானைகள் வரும் சண்டைக் காட்சிகள் வரைகலையில் எடுக்கப்பட்டதுதானா என்று சந்தேகிக்கும் அளவிற்கு மிகவும் உயிரோட்டமாகவும், உணர்வுப்பூர்வமாகவும் அமைந்துள்ளது.

தம்பி திருநாவுக்கரசுவின் மிகச்சிறப்பான ஒளிப்பதிவும், தம்பி சபீக் முகமதுவின் படத்தொகுப்பும் காடுகளில் பயணித்த அனுபவத்தை தருகிறது. தம்பி சந்தோஷ் நாராயணனின் பின்னணி இசை படத்திற்கு மேலும் வலுசேர்க்கிறது. கலை இயக்குநர் சந்தானத்தின் கலைப்பணிகள் உண்மையின் நெருக்கத்திற்கு கொண்டு சென்று நம்மை படத்தோடு ஒன்றச்செய்கிறது. படத்தில் பல விதமான சண்டை காட்சிகள் இருந்தாலும் ஒவ்வொன்றும் தனித்துவமாக செய்திருக்கின்ற தம்பி திலீப் சுப்புராயனின் பணி பாராட்டத்தக்கது. அதேபோன்று, படத்தில் நடித்துள்ள அனைத்து புது முகங்களின் தேர்வும், அவர்களின் இயல்பான நடிப்பும் மிகச்சிறப்பாக அமைந்துள்ளது.

இப்படியொரு அழுத்தமான கதையினை திரைப்படமாக எடுக்க முன்வந்த தயாரிப்பு நிறுவனத்திற்கும், படம் மிகச்சிறப்பாக வெளிவந்து வெற்றி பெற்றுள்ளமைக்குக் காரணமான திரைக்கதை, கதைக்களம், திரை உருவாக்கம் என அனைத்திலும் தனக்கென்று தனிவழியைப் பின்பற்றி ஆகச்சிறந்த படைப்புகளை அளித்து வரும் இயக்குநர் தம்பி கார்த்திக் சுப்பராஜுக்கும், தம்பிகள் எஸ்.ஜே.சூர்யா, ராகவா லாரன்ஸ் ஆகியோருக்கும், கதை மாந்தர்களாக நடித்துள்ள அனைத்து நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் உள்ளிட்ட படக்குழுவினர் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழங்குடி மக்களின் வாழ்வியலை, அவர்களின் உரிமைப்போராட்டத்தை பேசும் 'ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்' திரைப்படத்தை இதுவரை காணத் தவறிய உலகெங்கும் பரவிவாழும் என் பேரன்பிற்குரிய தமிழ் மக்கள் அனைவரும், நம் உள்ளத்து உணர்வினைப் பேசும் இத்திரைக்காவியத்தைத் திரையரங்குகளுக்குச் சென்று கண்டு களித்து படத்திற்கு மிகப்பெரிய ஆதரவினை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்று சீமான் தன் அறிக்கையில் கூறியுள்ளார். சீமானின் இந்த அறிக்கைக்கு, இயக்குநர் கார்த்திக் சுப்பராஜ் தன் எக்ஸ் பக்கத்தில் நன்றி தெரிவித்துள்ளார்.

# மன்சூர் அலிகான் மீது கடும் நடவடிக்கை – டிஜிபிக்கு தேசிய மகளிர் ஆணையம் உத்தரவு

**சென்னை : நவ. 21,**

**நடிகைகள் த்ரிஷா, குஷ்பு உள்ளிட்டோர் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசிய மன்சூர் அலிகான் மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழக டிஜிபிக்கு தேசிய மகளிர் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.**

சமீபத்தில் வெளியான வீடியோ ஒன்றில் பத்திரிகையாளரின் கேள்விக்கு பதிலளித்த மன்சூர் அலிகான் நடிகை த்ரிஷா குறித்து மிகவும் அருவருத்தக்க வகையில் பேசியிருந்தார். இந்தப் பேச்சுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. மன்சூர் அலிகானின் இந்தப் பேச்சு குறித்து தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள த்ரிஷா, "இவரை போன்றவர்களால் தான் மனித குலத்துக்கே அவப்பெயர் என்றும், இனி தனது திரை வாழ்க்கையில் அவருடன் இணைந்து நடிக்க மாட்டேன்" என்றும் கூறியிருந்தார். த்ரிஷாவைத் தொடர்ந்து இயக்குநர் லோகேஷ், நடிகை மாளவிகா மோகனன், கார்த்திக் சுப்பராஜ், குஷ்பு உள்ளிட்டோர் மன்சூர் அலிகானுக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், மன்சூர் அலிகான் மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழக டிஜிபிக்கு தேசிய மகளிர் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து தேசிய மகளிர் ஆணையத்தில் அதிகாரபூர்வ எக்ஸ் பக்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது: நடிகை த்ரிஷா குறித்து நடிகர் மன்சூர் அலிகான் பேசியது மிகுந்த கவலை அளிப்பதாக உள்ளது. இந்த விவகாரத்தில் நாங்கள் தாமாக முன்வந்து, ஐபிசி பிரிவு 509 பி மற்றும் பிற சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு டிஜிபிக்கு உத்தரவிடுகிறோம். இதுபோன்ற கருத்துகள் பெண்களுக்கு எதிரான வன்முறையை சாதாரணமாக கருதத் தூண்டுகிறது. இது வன்மையாக கண்டிக்கப்படவேண்டிய ஒன்று". இவ்வாறு அப்பதிவில் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த விவகாரம் குறித்து ட்வீட் செய்திருந்த நடிகையும் தேசிய மகளிர் ஆணைய உறுப்பினருமான குஷ்பு, தேசிய மகளிர் ஆணையத்தின் மேலதிகாரிகளுக்கு இந்த விஷயத்தை கொண்டு சென்றுவிட்டதாகவும், இது குறித்து மன்சூர் அலிகான் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருந்தார்.



வரலாறு உலகம்

# ஹமாஸ் பதுங்கிடமாக செயல்பட்ட அல் ஷிபா மருத்துவமனை ஆதாரத்தை வெளியிட்ட இஸ்ரேல் ராணுவம்




**டெல் அவிவ் : நவ. 21,**

**மருத்துவமனைகளை ஹமாஸ் பதுங்கிடமாகவும், தாக்குதலுக்கு திட்டமிடும் இடமாகவும் பயன்படுத்துகிறது, அல் ஷிபா மருத்துவம்னைக்குக் கீழ் ஹமாஸ் சுரங்கம் இருக்கிறது என்று கூறிவந்த இஸ்ரேல் அதனை உறுதிப்படுத்துவதுபோல் சில ஆதாரங்களை வெளியிட்டுள்ளது. காசா மருத்துவமனைகளில் 35க்கும் மேற்பட்ட சுரங்கங்களைக் கண்டுபிடித்துள்ளதாகவும் இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.**

இஸ்ரேல் ராணுவம் எக்ஸ் தளத்தில் ஒரு புகைப்படத்தைப் பகிர்ந்துள்ள ஹமாஸ், "அம்பலமானது: இந்தப் புகைப்படம் அக்டோபர் 7, 2023 அன்று அல் ஷிபா மருத்துவமனையில் கேமராவில் பதிவானது. காலை 10.42 மணி முதல் 11.01 மணிக்குள் சில பிணைக் கைதிகளை ஹமாஸ் குழுவினர் அழைத்து வருகின்றனர். அதில் ஒருவர் நேபாளி, ஒருவர் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவர்களில் ஒருவர் காயமடைந்துள்ளார். அவரை மருத்துவமனை படுக்கையில் சுமந்து செல்கின்றனர். மற்றொருவர் நடந்து வருகிறார்" என்று தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் போரில் இதுவரை உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13 ஆயிரத்தைக் கடந்துள்ளது. இஸ்ரேல் தரப்பில் 1200 பேரும், காசாவில் குழந்தைகள் உள்பட 12300க்கு அதிகமானோரும் உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையில் இஸ்ரேல் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்துள்ள காசாவின் மிகப் பெரிய மருத்துவமனையான அல் ஷிபா மருத்துவமனையில் சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் நிலவுகிறது. அங்கே மருத்துவக் கழிவுகள் தேங்கி தொற்று பரவும் சூழல் ஏற்பட்டுள்ளது. சனிக்கிழமை அங்கிருந்து 2000க்கும் அதிகமானோர் வெளியேற்றப்பட்டாலும் கூட வெளியேற முடியாத நிலையில் 200க்கும் மேற்பட்ட நோயாளிகள் தவித்து வருகின்றனர். அங்கே ஆய்வு செய்த உலக சுகாதார நிறுவனக் குழு நோயாளிகள் நிலவரம் குறித்து கவலை தெரிவித்திருந்தது நினைவுகூரத்தக்கது,

அல் ஷிபா மருத்துவமனையில் 55 மீட்டர் அளவிலான சுரங்கப் பாதையை கண்டுபிடித்துள்ளதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. சுரங்கப் பாதைக்குள் படிக்கட்டு, குண்டுகள் துளைக்காத கதவு, ஸ்னைப்பர்கள் தாக்குதல் நடத்த ஏதுவாக துப்பாக்கி முனை நுழையும் அளவிலான துளைகள் என பல்வேறு வசதிகளை ஹமாஸ் குழுவினர் ஏற்படுத்தி வைத்துள்ளதாகத் தெரிவித்தது. ஆனால் இது முழுப் பொய் என்று ஹமாஸ் மறுத்துள்ளது.

இதற்கிடையில் பிணைக் கைதியாக பிடித்துவைக்கப்பட்ட இஸ்ரேலைச் சேர்ந்த நோவா மார்சியானோ என்பவரை ஹமாஸ் குழுவினர் கொன்றுவிட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. அல் ஷிபா மருத்துவமனைக்குள் தான் அவர் கொல்லப்பட்டதாக ஆதாரங்களை வழங்கியுள்ள இஸ்ரேல் ராணுவம், ஹமாஸின் இயங்குதளமாக காசாவின் அல் ஷிபா மருத்துவமனை இயங்கியதற்கு இது ஒன்றே போதும் எனவும் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் வசம் 200க்கும் மேற்பட்ட பிணைக் கைதிகள் உள்ள நிலையில் அவர்கள் விரைவில் விடுவிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளதாகவும் இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. அதேவேளையில் பிணைக் கைதிகளை விடுவிக்க ஹமாஸுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக வந்த தகவல்களை பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மறுத்துள்ளார்.

ஐ.நா. பொதுச்செயலாளர் ஆண்டானியோ குத்ரேஸ் தனது எக்ஸ் சமூகவலைதளப் பக்கத்தில், "மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நடக்கும் இந்தப் போரால் பெண்கள், குழந்தைகள் உள்பட அப்பாவி பொதுமக்கள் உயிரிழப்பு ஏற்றுக் கொள்ள முடியாத எண்ணிக்கையில் அதிகரிக்கிறது. மனிதாபிமான அடிப்படையில் போர் நிறுத்தப்பட வேண்டும்" என்று பதிவிட்டுள்ளார்.

# இந்தியா நோக்கி வந்த இஸ்ரேலிய கப்பல் செங்கடலில் கடத்தல்

## ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் கைவரிசை




**செங்கடல் : நவ. 21,**

**இந்தியா நோக்கி வந்து கொண்டிருந்த இஸ்ரேல் பெரும் பணக்காரருக்கு சொந்தமான கப்பல் ஒன்றை ஏமனின் ஹவுத்தி கிளர்ச்சிப் படையினர் கடத்தியுள்ளனர்.**

அந்தக் கப்பலில் இருந்த 25 பேரும் பிணைக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேல் - ஹமாஸ் போர் தற்போது அந்தப் பிராந்தியத்தில் கடல்வழியில் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளதன் அடையாளமாக இந்தக் கடத்தல் சம்பவம் உலக நாடுகளால் பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக ஈரான் ஆதரவு ஹவுத்தி படைகள் கூறும்போது, இஸ்ரேலுடன் தொடர்புடைய காரணத்தாலேயே அந்தக் கப்பலை நாங்கள் சிறைப்பிடித்துள்ளோம். காசா மீதான இஸ்ரேல் தாக்குதல் நிறுத்தப்படும் வரை கடல் பகுதியில் இதுபோல் இஸ்ரேல் கப்பல்களை குறிவைப்போம். இஸ்ரேல் நாட்டுக் கப்பலோ இல்லை இஸ்ரேலுடன் வர்த்தக தொடர்புள்ள கப்பலோ நிச்சயமாக எங்களின் இலக்காகும் என்று எச்சரித்துள்ளனர்.

இது ஆரம்பம்தான், ஹவுத்திபடைகளின்தலைமை செய்தித் தொடர்பாளர் முகமது அப்துல் சலாம் வெளியிட்ட அறிக்கையில், இஸ்ரேலியர்களுக்கு அடக்குமுறை தான் புரியும். இஸ்ரேல் கப்பலை நாங்கள் இப்போது பிணையாக பிடித்துவைத்திருப்பது போரில் நாங்கள் எங்களை இணைத்துக் கொண்டதன் தீவிரத்தை உணர்த்தும். என்ன விலை கொடுத்தாவது கடல்பரப்பில் நாங்கள் இந்தப் போரை மேற்கொள்வோம். இது வெறும் ஆரம்பம்தான் என்று குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அலுவலகம் இந்தச் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்துள்ளது. பிரதமர் அலுவலகத்தின் கண்டனக் குறிப்பில், ஹவுத்திக்கள் இஸ்ரேலிய பெரும் பணக்காரர் ஒருவருக்குச் சொந்தமான கப்பலை சிறைப்பிடித்துள்ளது. அதில் உள்ள 25 பேரில் ஒருவர் கூட இஸ்ரேலியர் அல்ல. பல்கேரியா, பிலிப்பைன்ஸ், மெக்சிகோ, உக்ரைன் எனப் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் இருக்கும் கப்பலைக் கடத்தி ஏமன் மிகப்பெரிய சர்வதேச குற்றம் புரிந்ததோடு உலக நாடுகளின் கோபத்துக்கு ஆளாகியுள்ளது. இது ஈரானின் பயங்கரவாதத்தின் வெளிப்பாடு என்று கூறியுள்ளது.

இதற்கிடையில் பிணைக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்கள் இஸ்லாமிய சட்டத்திட்டங்களுக்குஉட்பட்டு நடத்தப்படுவதாக ஹவுத்தி குழு தெரிவித்துள்ளது.

தென்மேற்கு ஆசிய நாடான ஏமன் நாட்டில், சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும், ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015-ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதில் அதிபருக்கு ஆதரவாக சவுதி அரேபியா செயல்படுகிறது. ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது.

# ஈராக்கில் உள்ள அமெரிக்க ராணுவத்தளம் மீது பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல்



**ஈராக் : நவ. 21,**

**ஈராக்கில் உள்ள அமெரிக்க ராணுவத்தின் விமானத்தளம் மீது, ஈராக்கை சேர்ந்த இஸ்லாமிக் ரெசிஸ்டன்ஸ் என்ற பயங்கரவாத அமைப்பினர் திடீர் தாக்குதலில் ஈடுபட்டனர்.**

ஈராக்கின் மேற்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஐன் அல்-அசாத் என்னும் இடத்தில், அமெரிக்க ராணுவத்தின் விமானத்தளம் ஒன்று அமைந்துள்ளது. சதாம் உசேன் காலத்தில் ஈராக்கை ஆக்கிரமித்த அமெரிக்கப் படைகள் அதன் பின்னர் அங்கிருந்து விலகிய பிறகும் ஒரு சில தளங்களை அமெரிக்க துருப்புகள் இன்னமும் ஆக்கிரமித்துள்ளன. அவற்றில் ஒன்று அஜ்ன் அல் அசாத் விமானத்தளம்.

இந்த விமானத்தளம் மீது ட்ரோன்கள் மூலம் திடீர் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. ஈராக்கில் உள்ள இஸ்லாமிக் ரெசிஸ்டன்ஸ் என்ற அமைப்பு இந்த தாக்குதலுக்கு பொறுப்பு ஏற்றது. சிறிய இடைவெளிகளில் அமெரிக்க தளத்தை குறிவைத்து ட்ரோன்களை தொடர்ந்து ஏவியது. அல்-அசாத் விமானப்படை தளத்தில் தாக்குதல் நடத்திய விவரங்களை பயங்கரவாத அமைப்பு பின்னர் வெளியிட்டது.

"எங்களது ட்ரோன்கள் அமெரிக்க விமானப்படை தளத்தின் இலக்குகளை துல்லியமாக தாக்கின. இஸ்ரேலுக்கு ஆதரவளிக்கும் அமெரிக்காவுக்கு எதிராக இந்த தாக்குதலை நடத்தி உள்ளோம். அமெரிக்காவுக்கு எதிரான எங்களது தாக்குதல் தொடரும்" என இஸ்லாமிக் ரெசிஸ்டன்ஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. ஈராக்கின் அமெரிக்க தளம் தாக்கப்பட்டது மற்றும் வளாகத்தின் சேதங்கள் குறித்து அமெரிக்கா உடனடியாக எதுவும் தெரிவிக்கவில்லை.

முன்னதாக, இஸ்ரேலுக்கு ஆதரவாக மத்திய கிழக்கில் நிலை நிறுத்தப்பட்டிருக்கும் அமெரிக்காவின் விமானந்தாங்கிபோர்க்கப்பல் மீதும் இஸ்லாமிய ஆயுதக் குழுக்கள் தாக்குதல் தொடுத்தன. மத்தியசிரியாவில் இருந்து ட்ரோன்கள் மூலம் தொடுக்கப்பட்ட தாக்குதலை அமெரிக்க எதிர்கொண்டு அழித்தது. பின்னர் விமானப்படைகளை ஏவி சிரியாவில் இருக்கும் ஈரான் ஆதரவு ஆயுதக்குழுக்களின் நிலைகள் மீது அண்மையில் குண்டுகளை வீசி நிர்மூலம் செய்தது.

# இந்தியாவுடனான 100க்கும் மேற்பட்ட ஒப்பந்தங்களை மறுஆய்வு செய்வோம்

## மாலத்தீவு அதிரடி அறிவிப்பு



**மாலத்தீவு : நவ. 21,**

**இந்தியாவுடனான 100-க்கும் மேற்பட்ட ஒப்பந்தங்களை மாலத்தீவின் புதிய அரசு மறு ஆய்வு செய்யும் என அந்நாட்டு அரசு உயரதிகாரி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.**

மாலத்தீவின் புதிய அதிபராக முகமது மூயிஸ் கடந்த வெள்ளிக்கிழமை பதவியேற்றார். அதிபராக பதவியேற்றவுடன் உரையாற்றிய முகமது மூயிஸ், 'மாலத்தீவின் இறையாண்மை, சுதந்திரத்தைப் பாதுகாக்க அந்நிய நாட்டு ராணுவம் இல்லாத மாலத்தீவாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார். செப்டம்பரில் நடைபெற்ற அதிபர் தேர்தல் பிரச்சாரத்திலும் இந்திய ராணுவத்தை மாலத்தீவிலிருந்து வெளியேற்றுவதாக அவர் வாக்குறுதி அளித்திருந்தார்.

இந்தச் சூழலில், அதிபர் முகமது மூயிஸை சனிக்கிழமை மரியாதை நிமித்தமாக சந்தித்த மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூவிடம், மாலத்தீவில் இருந்து இந்தியா தனது ராணுவத்தை திரும்பப் பெற வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிலையில், செய்தியாளர் சந்திப்பில் பேசிய அதிபர் அலுவலகத்தின் பொதுக் கொள்கைக்கான துணை செயலர் முகமது பிர்ஸூல் அப்துல் கலீல், 'மருத்துவ மீட்புப் பணிகளுக்காக இந்தியா வழங்கிய முதல் ஹெலிகாப்டரை கையாள 24 வீரர்கள், டார்னியர் விமானத்தைக் கையாள 25 வீரர்கள், 2-ஆவது ஹெலிகாப்டரை கையாள மேலும் 26 வீரர்கள், பராமரிப்பு மற்றும் பொறியியல் பிரிவில் 2 வீரர்கள் என மொத்தம் 77 இந்திய ராணுவ வீரர்கள் மாலத்தீவில் உள்ளனர்.

அவர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவதற்கான முயற்சிகளை அதிபர் மூயிஸ் தொடங்கியுள்ளார். இந்தியாவுடன் உத்ருதிலா ஃபல்ஹூ துறைமுகத்துக்கான ஒப்பந்தம், பாதுகாப்புத் துறை ஒப்பந்தங்கள் என 100-க்கும் மேற்பட்ட ஒப்பந்தங்களில் முந்தைய அரசு கையொப்பமிட்டுள்ளன. அந்த ஒப்பந்தங்கள் புதிய அரசால் மறு ஆய்வு செய்யப்படும்' என்றார். பாதுகாப்பு காரணங்களை முன்னிறுத்தி, மாலத்தீவில் நிலைகொண்டுள்ள இந்திய ராணுவ வீரர்களின் சரியான எண்ணிக்கையை வெளியிட முந்தைய அரசு மறுத்து வந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2013 முதல் 2018 வரையில் அதிபராக இருந்த அப்துல்லா யாமீன் சீனாவுக்கு ஆதரவாகச் செயல்பட்டார். அதன்பிறகு இந்தியாவுக்கு ஆதரவாகச் செயல்பட்ட அதிபர் முகமது சோலியை முகமது மூயிஸ் தற்போதைய தேர்தலில் தோற்கடித்து அதிபராகி உள்ளார். அப்துல்லா யாமீனைப் போலவே முகமது மூயிஸ் சீனாவுக்கு ஆதரவாக செயல்படுவார் என்று கருதப்படுகிறது.

# அமெரிக்காவில் ஒரே ஆண்டில் 70,000 பேரை காவு வாங்கிய சீனாவின் போதைப்பொருள்



**அமெரிக்கா : நவ. 21,**

**சீனாவில் இருந்து அதிக ஆபத்தான போதை மருந்தான ஃபெண்டானில் புழக்கம் தொடர்பிலான நடவடிக்கை முன்னெடுக்க அமெரிக்கா புதிய ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டுள்ளது.**

கடந்த ஒரே ஆண்டில் அமெரிக்காவில் ஃபெண்டானில் போதை மருந்து காரணமாக 70,000 பேர்கள் மரணமடைந்துள்ளனர். தற்போது இந்த விவகாரம் தொடர்பில் சீனா நடவடிக்கை முன்னெடுக்க ஒப்புக்கொண்டுள்ளது. அமெரிக்கா அதன் தடயவியல் அறிவியல் கழகத்தின் மீதான கட்டுப்பாடுகளை நீக்கும் வரை ஃபெண்டானில் குறித்த பேச்சுக்களை நடத்த சீனா மறுத்து வந்தது.

தற்போது ஜோ பைடன் மற்றும் சீனாவின் ஜி ஜின்பிங் ஆகியோர் சான் பிரான்சிஸ்கோவில் ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சிமாநாட்டின் ஒருபகுதியாக சந்தித்துக் கொண்ட நிலையில் புதிய ஒப்பந்தம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. சீனா ஃபெண்டானில் விவகாரத்தில் உறுதியான நடவடிக்கை முன்னெடுக்கும் என்றால், போதைப்பொருட்களுக்கு எதிரான போரில் பைடன் நிர்வாகம் வெற்றி பெற்றுள்ளதாக கூறி தேர்தலை சந்திக்கலாம் என்றே கூறப்படுகிறது.

மெக்ஸிகோ மற்றும் சீனா ஆகிய நாடுகள் ஃபெண்டானில் மற்றும் ஃபெண்டானில் தொடர்பான பொருட்களை நேரடியாக அமெரிக்காவிற்கு கடத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது. 2018ல் சீன அரசாங்கம் ஃபெண்டானில் ஏற்றுமதிக்கு எதிராக தொடர் நடவடிக்கைகளை அறிவித்தது.

# சாட் ஜிபிடியை உருவாக்கிய 'ஓப்பன் ஏஐ' சிஇஓ சாம் ஆல்ட்மேன் நீக்கம்

**சான்பிரான்சிஸ்கோ : நவ. 21,**

**சாட்ஜிபிடி செயலியை உருவாக்கிய ஓப்பன் ஏஐ நிறுவனத்தின் சிஇஓ-வாக பதவி வகித்து வந்தவர் சாம் ஆல்ட்மேன்.**

இவர் நிறுவனத்துடன் வெளிப்படைத்தன்மையுடனும் சரியான முறையிலும் தொடர்பில் இல்லை என்று குற்றம்சாட்டி கடந்த வெள்ளிக்கிழமை, ஓப்பன் ஏஐ நிறுவனத்தின் இயக்குநர் குழு, சாம் ஆல்ட்மேனை நிறுவனத்திலிருந்து நீக்கியது. அவருக்குப் பதிலாக, அந்நிறுவனத்தின் மீரா முராதி சிஇஓ-வாக நியமிக்கப்பட்டார்.

சாம் ஆல்ட்மேனின் நீக்கம் சர்வதேச அளவில் தொழில் நுட்பத்துறையினர் மத்தியில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. ஏனென்றால், ஓப்பன் ஏஐ நிறுவனத்தின் நிறுவனர்களில் ஒருவர் சாம் ஆல்ட்மேன். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் புதிய பாய்ச்சலான 'சாட் ஜிபிடி' அவரது தலைமைத்துவத்தின் கீழ்தான் உருவாக்கப்பட்டது. இதனால், செயற்கை நுண்ணறிவு துறையின் மிக முக்கியமான முகமாக சாம் ஆல்ட்மேன் உள்ளார். இந்நிலையில், அவரை நிறுவனத்திலிருந்து இயக்குநர் குழு நீக்கிஇருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



சாம் ஆல்ட்மேனின் நீக்கத்தைத் தொடர்ந்து அந்நிறுவனத்தின் தலைவர் கிரேக் ப்ரோக்மேன் உட்பட முக்கிய அதிகாரிகள், ஊழியர்கள் ராஜினாமா செய்துள்ளனர். ஓப்பன் ஏஐ நிறுனத்தின் முதலீட்டாளர்கள் உட்பட பல்வேறு தரப்பினர் சாம் ஆல்ட்மேனை மீண்டும் சிஇஓ-வாக நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சாம் ஆல்ட்மேன் மீண்டும் சிஇஓ-வாக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி நியமிக்கப்படும் பட்சத்தில் இயக்குநர் குழு ராஜினாமா செய்து வெளியேறும் என்று கூறப்படுகிறது. சாம் ஆல்ட்மேனுக்கு மைக்ரோசாப்ட் நிறுவனம் ஆதரவு தெரிவித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

# காசா மக்களுக்காக ரூ.1107 கோடி சவுதி அரேபியா திரட்டிய மனிதாபிமான நிதி



**சவுதி அரேபியா : நவ. 21,**

**காசா பகுதியில் உள்ள பாலஸ்தீன மக்களுக்காக சவுதி அரேபியா ரூ. 1,107 கோடி தொகையை திரட்டியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

மொத்தம் 800,000 பேர்கள் காசா மக்களுக்காக நிதியுதவி அளித்துள்ளதாக சவுதி அரேபியா தெரிவித்துள்ளது. மன்னர் சல்மானின் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையம் சார்பில் இந்த நிதி திரட்டும் பணி முடுக்கிவிடப்பட்டது. மேலும் மன்னர் சல்மான் மற்றும் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் ஆகியோர் இது தொடர்பில் பொதுமக்களிடம் கோரிக்கையும் முன்வைத்துள்ளனர்.

இது மட்டுமின்றி, 12,000 க்கும் மேற்பட்ட பொதுமக்களின் மரணத்திற்கு காரணமான இஸ்ரேல் குண்டுவீச்சைத் தொடர்ந்து காசா பகுதி மக்கள் எதிர்கொள்ளும் பல அழுத்தமான மனிதாபிமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக இந்த நிதி பயன்படுத்தப்படும் என்றே கூறப்படுகிறது. முன்னதாக காசா பகுதி மக்கள் உணவு மற்றும் குடிநீர் இன்றி பட்டினியை எதிர்கொள்ளும் கடும் நெருக்கடியான சூழலில் தள்ளப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டிருந்தது.

இஸ்ரேல் இராணுவத் தாக்குதலைத் தொடங்கியதில் இருந்து உணவு, தண்ணீர், எரிபொருள் மற்றும் பிற பொருட்களின் பற்றாக்குறை காசா பகுதியில் மோசமாகி வருகிறது என்றே தகவல் வெளியாகியுள்ளது.

# வட கொரியா உளவு செயற்கைக்கோள் ஏவினால் தாக்குதல் நடத்துவோம்

## தென் கொரியா எச்சரிக்கை



**தென் கொரியா : நவ. 21,**

**தென் கொரியாவின் எச்சரிக்கையையும் மீறி, உளவு செயற்கைக்கோளை ஏவ வட கொரியா தயாராவதால், கொரிய தீபகற்பத்தில் மீண்டும் பதற்றம் சூழ்ந்துள்ளது. இதனால் உக்ரைன், காசா வரிசையில் உலக நாடுகளின் கவலையில் கொரியாவும் சேர்ந்திருக்கிறது.**

வட கொரியா தனது உளவு செயற்கைக்கோளை ஏவுவதற்கான ஏற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று, தென் கொரிய ராணுவம் நேற்று எச்சரிக்கை விடுத்தது. நடப்பு ஆண்டில் மட்டும் இதுவரை 2 முறை உளவு செயற்கைக்கோளினை ஏவும் முயற்சியில் வடகொரியா தோல்வி கண்டிருக்கிறது. எனினும் 3வது முறையாக அடுத்த உளவு செயற்கைக்கோளினை ஏவும் முயற்சியில் தீவிரமாக உள்ளது.

தங்களது உளவுத் தகவல்களின் அடிப்படையில், இந்த வாரத்தில் வட கொரியா தனது உளவு செயற்கைக்கோளை ஏவ இருப்பதாக தென் கொரிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஷின் வோன் சிக் தெரிவித்தார்.

இது தொடர்பாக, "ராணுவ உளவு செயற்கைக்கோளை ஏவுவதற்கான தயாரிப்புகளை உடனடியாக நிறுத்துமாறு வட கொரியாவை நாங்கள் கடுமையாக எச்சரிக்கிறோம். எச்சரிக்கையை மீறி ராணுவ உளவு செயற்கைக்கோளை ஏவ வடகொரியா முயற்சித்தால், எங்கள் நாட்டு மக்களின் உயிருக்கும், பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்கத் தேவையான நடவடிக்கைகளை எங்கள் ராணுவம் மேற்கொள்ளும்" என்று தென் கொரிய ராணுவத்தின் தலைமை இயக்குனரான காங் ஹோ-பில் நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.


உக்ரைன் மீதான் ராணுவத் தாக்குதல் காரணமாக, ஆயுத தளவாடங்களின் தட்டுப்பாட்டில் தவிக்கும் ரஷ்யாவுக்கு, தனது ஆயுதங்களை வட கொரியா வாரி வழங்கி வருகிறது. பதிலுக்கு ரஷ்யா தனது விண்வெளி தொழில்நுட்பங்களை வட கொரியாவுக்கு திறந்து விட்டிருக்கிறது. அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் மற்றும் அதன் நட்பு நாடுகளின் எச்சரிக்கையை புறக்கணித்து, வடகொரியா இந்த ஆண்டின் தொடக்கம் முதலே அதிக ஆயுத சோதனைகளை நடத்தி வருகிறது. தென் கொரியா மீதும், அவசியமெனில் அமெரிக்கா மீதும், தாக்குதல் தொடுக்க வட கொரியா தயாராகி வருகிறது. தனது ராணுவ நடவடிக்கைகளுக்கு உதவும் நோக்கிலும், எதிரிகளின் நகர்வுகளை ஒற்றறியவும் உளவு செயற்கைக்கோளை வட கொரியா ஏவத் தயாராகிறது.



# தமிழக அரசு தொடர்ந்து வழக்கு ஆளுநர் 3 ஆண்டுகளாக என்ன செய்தார்

# இந்தியா நோக்கி வந்த இஸ்ரேலிய கப்பல் செங்கடலில் கடத்தல்



# இந்தியாவுடனான நூற்றுக்கும் மேற்பட்ட ஒப்பந்தங்களை மறு ஆய்வு செய்வோம்


| சென்னை / புதுக்கோட்டை | 21.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

21.11.2023 செவ்வாய்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**ஆனந்திபென் படேல்** , இந்தியாவின் குசராத் முதலமைச்சர் (பி.1941)



**த. இராசலிங்கம்** , இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி.1933)




**கே. கோவிந்தராஜ்** , இலங்கையின் மலையக எழுத்தாளர் (பி.1949) (இ.2009)



## இன்றைய நினைவு நாள்

**வலையட்டூர் வெங்கையா** , இந்தியக் கல்வெட்டாய்வாளர், வரலாற்றாளர் (பி.1864) (இ.1912)



**ச. வெ. இராமன்** , நோபல் பரிசு பெற்ற இந்திய இயற்பியலாளர் (பி.1888) (இ.1970)



**தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார்** , இந்திய வழக்கறிஞர், அரசியல்வாதி, விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1903) (இ.1991)



## உலகத் தொலைக்காட்சி நாள்

## தேசிய மாவீரர் வாரம் ஆரம்பம் (தமிழீழம்)